# ஆரம்பக்கல்வி

## ELEMENTARY EDUCATION

SEPTEMBER—1955

29 SEP 1955
MADRAS
1742
3-56






திரு. சுப்பிரமணிய பாரதியார்

ஆரம்பக்கல்வி ஆபீஸ்
94–95, புது தெரு
மண்ணடி, சென்னை-1





ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : **பி. வீரராகவன்**

வருட சந்தா ரூ. 3.] [தனிப் பிரதி 4 அணா.

மலர் 16 | செப்டம்பர் 1955 | இதழ் 9


# ஆரம்பப் பள்ளிகளுக்கு ஆபத்து!

## அரசாங்கத்தின் அதிசயப் போக்கு!!

**1955** மே 19ம் நாளன்று சென்னை அரசாங்கம் ஓர் உத்தரவைப் பிறப்பித்தது.

அந்த உத்தரவைக் கண்டு அனைவருடைய உள்ளமும் மகிழ்ச்சியெனும் வெள்ளத்தில் நீந்தி மகிழ்ந்தது.

“இனி ஆரம்பக் கல்வி நம் நாட்டில் விரைந்து பரவும். பயமில்லை! ஜெயமுண்டு மனமே!” என்று ஆசிரியர்களெல்லாம் இன்பக் கீதம் இசைக்கலாயினர்.

"கல்வி உலகத்திற்கு நம் மாநிலத்தில் நல்லதோர் எதிர்காலம் பிறந்துவிட்டது" என்று, பள்ளி நிர்வாகிகளெல்லாம் திட்டமாகக் கருதலாயினர்.

இந்த ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து, எல்லா ஏழை மாணவர்களுக்கும், எட்டாவது வகுப்பு வரையில் கல்வி இலவசம் என்பதே அந்த அரிய உத்தரவு.

எந்தெந்தப் பெற்றோர்களின் ஆண்டு வருமானம் 1200 ரூபாய் அல்லது அதற்குக் குறைவாக இருக்கிறதோ அவர்களுடைய பிள்ளைகளுக்கெல்லாம் இந்தச் சலுகை உண்டு என்று அந்த உத்தரவு தெரிவித்தது.

ஒரு மாணவன் ஒரு வகுப்பிலிருந்து மேல் வகுப்புக்கு முதல் ஆண்டில் தேறத் தவறிவிட்டாலும் அடுத்த ஆண்டிலும் அவனுக்கு இந்த இலவசக் கல்விச் சலுகை உண்டு என்றும் அந்த உத்தரவு அறிவித்தது.

இங்ஙனம் ஏழைப் பிள்ளைகளுக்கெல்லாம் கல்வியை இலவசமாக அளிப்பதால் பள்ளிக்கூட நிர்வாகிகளுக்கு ஏற்படுகிற சம்பள நஷ்டம் முழுவதையும் அரசாங்கத்தார் அவர்களுக்கு ஈடுகட்டித் தருவர் என்றும் அந்த உத்தரவு தெரிவித்தது.

இவ்வாறெல்லாம் அந்த உத்தரவு எல்லாப் பிரச்சினைகளையும் தெளிவாகவும் திட்டமாகவும் தெரிவித்ததால் எல்லோருமே மகிழ்ச்சி யடைந்தனர்.

ஆசிரியர்களும் மகிழ்ந்தனர். பெற்றோர்களும் மகிழ்ந்தனர். மாணவர்களும் களிப்படைந்தனர். பள்ளி நிர்வாகிகளும் களிப்படைந்தனர்.

ஆனால் இந்தக் களிப்பு நீடித்து நிற்கவில்லை.

கொஞ்சம் கொஞ்சமாக மங்கலாயிற்று. மங்கி மங்கி மறையலாயிற்று.

ஜூன் முடிந்து ஜூலை பிறந்தது. ஜூலை மறைந்து ஆகஸ்டு தோன்றியது. ஆகஸ்டு ஓடி செப்டம்பரும் மலர்ந்தது. என்றாலும் பள்ளி நிர்வாகிகளுக்கு வரவேண்டிய நஷ்ட ஈட்டுத் தொகை அரசாங்கத்திடமிருந்து வரவில்லை.

அப்படி அது வாராத காரணத்தால், நஷ்ட ஈடு அரசாங்கத்திடமிருந்து கிடைத்தவுடன், வாங்குகிற சம்பளத்தைத் திருப்பித் தந்துவிடுகிறோம் என்று கூறி, பள்ளி நிர்வாகிகள், இலவசக்

கல்விக்குரிய ஏழைப் பிள்ளைகளிடமிருந்தும் சம்பளத்தை வாங்கித் தீரவேண்டிய கட்டாயத்துக்கு ஆளானார்கள்.

"கட்டிய சம்பளம் பிறகோர் நாள் திரும்பிவரும்—உண்மை தான்—ஆனால் இப்போது சம்பளத்தைக் கட்டவேண்டுமே—என்ன செய்வோம் நாங்கள்?" என்று இயம்பியபடி ஏழைப் பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளுக்கான சம்பளத்தை உடனடியாகக் கட்ட முடியாமல் திண்டாடினார்கள்.

ஐயோ பாவம்—அவர்களிடமிருந்து சம்பளம் வாங்காமலே இருந்துவிடலாம்—அரசாங்கத்திடமிருந்து நஷ்ட ஈடு என்றேனும் ஓர் நாள் வரத்தானே போகிறது என்று பள்ளி நிர்வாகிகள் எண்ணினாலோ, மாதந்தோறும் அவர்கள் செய்து தீரவேண்டிய செலவுகள், அவர்களை அப்படிச் செய்யாமல் தடுத்துவிட்டது.

வேலைக்காரிகள் — ஆயாக்கள் — தோட்டிகளுக்குச் சம்பளம், கைத்தொழிற் பயிற்சிக்குத் தேவையான பண்டங்கள் வாங்குவது, ஆசிரியர்களின் பிராவிடண்ட் நிதிக்கு நிர்வாகிகள் செலுத்தவேண்டிய தொகை, பள்ளிக்கூடக் கட்டிடத்திற்கு வாடகை, கல்விப் பயிற்சிக்குத் தேவையான கருவி, பண்டங்கள் வாங்குவது, வீட்டு ரிப்பேர் முதலிய பல்வேறு செலவுகளைப் பள்ளி நிர்வாகிகள் மாதந்தோறும் செய்து தீரவேண்டி இருக்கிறது.

எப்போதோ வர இருக்கிற அரசாங்கத்தின் நஷ்ட ஈட்டை மனதில் எண்ணிக்கொண்டால், மாதந்தோறும் செய்து தீரவேண்டிய இத்தனைச் செலவுகளையும், பள்ளி நிர்வாகிகள் எப்படிச் செய்துவிட முடியும்?

எனவேதான் அவர்கள், பின்னால் திருப்பித் தருவது, என்கிற அடிப்படையில், அந்தந்த மாதம், ஏழைப் பிள்ளைகளிடமிருந்தும் சம்பளத்தை வசூலிக்க முன்வந்தார்கள்.

இத்தகைய ஏற்பாட்டின் காரணமாகப் பள்ளி நிர்வாகிகளுக்கும் சங்கடம் ஏற்பட்டது. ஏழைப் பெற்றோர்களுக்கும் வேதனையிருந்தது.

இத்தகைய சங்கடமான சூழ்நிலை ஏற்பட்டதற்கு அரசாங்கமே பொறுப்பாளி என்பதை எவரும் மறுத்துவிட முடியாது.

எல்லா ஏழைப் பிள்ளைகளுக்கும் கல்வி இலவசம் என்கிற உத்தரவைப் பிறப்பித்த அன்றைக்கே, அதன்கூடவே, அரசாங்கத்தார், ஒவ்வோர் மாதத்திற்குரிய நஷ்ட ஈட்டுத் தொகையை அடுத்த

மாதம் 10ம் தேதிக்குள் அரசாங்கம் பள்ளி நிர்வாகிகளுக்குத் தந்து விடும் என்கிற உறுதிமொழியையும் தந்திருக்க வேண்டும்.

அவ்வாறு நஷ்ட ஈட்டுத் தொகையை உடனுக்குடன் கொடுத்திருந்தால் பள்ளி நிர்வாகிகளுக்கும் வேதனை இருந்திருக்காது. ஏழைப் பெற்றோர்களுக்கும் தொல்லை விளைந்திருக்காது.

ஆனால் அந்த நேரிய பாதை வழி நடக்கத் தவறிவிட்டது அரசாங்கம்.

தவறியதோடு நிற்கவில்லை, இப்போது ஒரு புதிய வெடிகுண்டையும் எடுத்து வீசியிருக்கிறது ஆரம்பப் பள்ளிகளின்மீது.

சென்னை நகரத்தில் உள்ளவை, முனிசிபல் பகுதிகளில் உள்ளவை, முனிசிபல் அல்லாத பகுதிகளில் உள்ளவை, என்று ஆரம்பப் பள்ளிகளை மூன்று வகையாகப் பிரித்து, ஒவ்வோர் பள்ளிக்கும், கீழ்க்கண்ட விகிதங்களின்படிதான் நஷ்டஈடு அளிக்கப்படும் என்று இப்போது அரசாங்கத்தார் தெரிவிக்கிறார்கள்.

| வகுப்புகள் | முனிசிபல் அல்லாத பகுதிகள் | | | | முனிசிபல் பகுதிகள் | | | | சென்னை நகரம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | ரூ. | 0 | 2 | 0 | ரூ. | 0 | 3 | 0 | ரூ. | 0 | 4 | 0 |
| 2. | | 0 | 3 | 0 | | 0 | 4 | 0 | | 0 | 6 | 0 |
| 3. | | 0 | 4 | 0 | | 0 | 5 | 0 | | 0 | 8 | 0 |
| 4. | | 0 | 5 | 0 | | 0 | 6 | 0 | | 0 | 10 | 0 |
| 5. | | 0 | 7 | 0 | | 0 | 8 | 0 | | 0 | 12 | 0 |
| 6. | | 0 | 12 | 0 | | 0 | 14 | 0 | | 1 | 2 | 0 |
| 7. | | 1 | 0 | 0 | | 1 | 2 | 0 | | 1 | 6 | 0 |
| 8. | | 1 | 2 | 0 | | 1 | 4 | 0 | | 1 | 8 | 0 |

இந்த உத்தரவை அரசாங்கத்தார் 14–9–55 அன்று பிறப்பித்திருக்கிறார்கள்.

இது நியாயமா என்பதைத்தான் நாம் கேட்க விரும்புகிறோம்.

பள்ளிக்கூடங்களின் நிர்வாகிகள், ஏற்கெனவே வசூலித்துவரும் கட்டணங்கள், இங்கே தரப்பட்டுள்ள கட்டணங்களைவிட ஏறத்தாழ மூன்று மடங்கு அதிகமாக இருந்துவருகின்றன.

அப்படி வசூலிக்கப்படுகிற கட்டணங்களைக்கொண்டே பள்ளிக்கூடச் செலவு முழுவதையும் சரிக்கட்ட முடியாமல் தத்தளித்து வருகிறார்கள் பள்ளி நிர்வாகிகள்.

நிலைமை இப்படி இருக்கும்போது, அவர்கள் வசூலித்துவருகிற கட்டணங்களை விட மூன்று மடங்கு குறைவான கட்டண விகிதங்களை எழுதிக்காட்டி, இந்த விகிதங்களின்படிதான் நஷ்ட ஈட்டை அளிப்போம் என்று அரசாங்கம் கூறுகிறதே, இது எப்படி முறையாகும்?

இவ்வளவு குறைவான அளவில் நஷ்டஈடு கிடைக்குமானல், நிர்வாகிகளால், தங்களுடைய பள்ளிகளை, எப்படி நடத்திச் செல்ல முடியும்?

பள்ளிக்கூடக் கட்டிடத்திற்கான வாடகையை எப்படித் தர முடியும்?

வேலைக்காரிகளுக்கும், ஆயாக்களுக்கும் கொடுக்கப்படவேண்டிய சம்பளத்தை எப்படிக் கொடுக்க முடியும்?

கைத்தொழிற் பயிற்சிக்குத் தேவையான கருவிகளை எவ்வாறு வாங்க இயலும்?

கல்விப் பயிற்சிக்கு வேண்டப்படும் மேசை நாற்காலிகள், கரும் பலகைகள் முதலியவற்றை எப்படி வாங்க முடியும்?

ஆசிரியர்களின் பிராவிடண்ட் நிதிக்குச் செலுத்தவேண்டிய தொகையை எப்படிச் செலுத்த முடியும்?

அரசாங்கத்தாரால் கொடுக்கப்படுகிற சம்பளம் போக மேற் கொண்டு ஆசிரியர்களுக்குத் தரப்படுகிற ஊதியத்தை எப்படித் தரமுடியும்?

இத்தனை செலவுகளையும், இவைபோன்ற இன்னும் பல அவசியமான செலவுகளையும், அரசாங்கத்தார் குறிப்பிட்டிருக்கின்ற மிகக் குறைந்த நஷ்டஈட்டுத் தொகையிலிருந்து சரிக்கட்டுவது என்பது ஒரு நாளும் இயலாச் செயல்.

அரசாங்கத்தாரே பள்ளிகளை நடத்தினாலும் சரி, இந்தக் குறைந்த தொகையைக் கொண்டு எல்லாச் செலவுகளையும் செய்து முடிப்பது, முடியாத காரியம்.

நாம் தெளிவாகவே சொல்ல முடியும். அரசாங்கத்தாரே பள்ளிகளை நடத்துவதானல், தனிப்பட்ட நிர்வாகிகளால் நடத்தப்படும் போது ஆவதைவிட, குறைந்தது இரண்டு மடங்காவது அதிகச் செலவாகும்.

ஆகவே அரசாங்கத்தால் இப்போது விதிக்கப்பட்டுள்ள நஷ்ட ஈட்டு விகிதங்கள் மிக மிகக் குறைவு என்பதை எவரும் மறுக்க முடியாது.

நஷ்டஈட்டு விகிதங்கள் குறைவு என்பது மட்டுமல்ல, இப்படிப் பட்ட விகிதங்களை விதிப்பதன் மூலம், அரசாங்கத்தார், தாங்கள், 19–5–55–ல் கொடுத்த வாக்குறுதியை மீறியவர்கள் ஆகிறார்கள்.

எல்லா ஏழைப் பிள்ளைகளுக்கும் இலவசக் கல்வி என்கிற ஏற்பாட்டால் பள்ளி நிர்வாகிகளுக்கு ஏற்படுகிற கட்டண நஷ்டம் (Loss of fee income) முழுவதையும் அரசாங்கத்தார் ஈடுகட்டித் தருவார்கள் என்று அரசாங்கத்தார் அப்போது தெரிவித்திருக்கிறார்கள்.

ஆனால் இப்போதோ, பள்ளிக்கூடங்கள் வசூலித்து வருவதை விட மிகக் குறைந்த கட்டணங்களை வரையறுத்து, அந்த அளவுக்குத்தான் நஷ்டஈடு அளிக்கப்படும் என்று அறிவிக்கிறார்கள்.

முழு அளவு நஷ்டஈடு தரப்படும் என்றனர் அன்று.

அல்ல–அல்ல, குறைந்த அளவு நஷ்டஈடுதான் கொடுக்கப்படும் என்கின்றனர் இன்று.

சரியா? முறையா?

நியாயம்தானா இந்த முரண்பாடு?

அன்று ஒரு பேச்சு! இன்று ஒரு பேச்சா!

கொடுத்த வாக்குறுதியை மீறி அதற்கு நேர்மாறாக நடக்கும் பண்பு, சாதாரண மனிதர்களுக்குக்கூட இழுக்கைத் தருவதாயிற்றே! இத்தகைய இயல்பு, கண்ணியம் மிக்க ஓர் அரசாங்கத்திடம் இருக்கலாமா?

அளித்த வாக்கை மீறுகின்றனர் அரசாங்கத்தார் என்பது மட்டுமல்ல, இவர்களால் இப்போது குறிப்பிடப்பட்டுள்ள சிறிய அளவு நஷ்டஈடுகூட, 11 மாதங்களுக்கு மட்டும்தான். பிறிதோர் மாதத்திற்குக் கிடையாது என்றும் தெரிவித்திருக்கின்றனர்.

அப்படியானால் 12–வது மாதத்திற்குரிய வாடகை முதலிய செலவுகளை எப்படிச் சரிக்கட்டுவது?

அந்த மாதத்தில் பள்ளிக்கூடத்திற்கு விடுமுறை என்பது உண்மைதான்.

ஆனால் விடுமுறை என்ற காரணத்திற்காக வாடகை முதலிய செலவுகள் நின்றுபோய் விடுவதில்லையே!

ஆகவே, 12 மாதங்களுக்கும் நஷ்டஈடு தரப்படுவதுதான் முறை.

மற்றொரு பிரச்சினை.

19-5-55-ல் அரசாங்கத்தார், சிறப்புக் கட்டணங்களுக்கு (Special Fees) இலவசச் சலுகை கிடையாது என்று மட்டும் தெரிவித்தனரே தவிர, சிறப்புக் கட்டணங்கள் இந்த அளவுதான் வசூலிக்கப்பட வேண்டும் என்று ஏதும் தெரிவிக்கவில்லை.

ஆனால் இப்போதோ, நுழைவுக் கட்டணம் நான்கணா, விளையாட்டுக் கட்டணம் நான்கணா, நூல்நிலையக் கட்டணம் நான்கணா ஆக 12 அணாதான் சிறப்புக் கட்டணமாக வசூலிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்திருக்கின்றனர்.

ஆம்! எந்தெந்த வகைகளில் நிர்வாகிகளின் வருமானத்தைக் குறைக்க முடியுமோ அந்தந்த வகைகளிலெல்லாம் குறைத்திட முன் வந்திருக்கின்றனர் அரசாங்கத்தார்.

ஏன் இந்த விபரீதப் போக்கு என்பதுதான் புரியவில்லை.

வருமானங்கள் அத்தனையும் பறிக்கப்பட்டுவிட்டால் செலவு மட்டும் எப்படிச் செய்யப்பட முடியும்?

வயல்களுக்கு நீர் பாய்ச்சப்படாவிட்டால் பயிர்கள் எப்படிச் செழித்து வளர முடியும்?

குழந்தைகளுக்குப் பால் கொடுக்கப்படாவிட்டால் அவைகளின் வாழ்விலே வளம் எப்படி இருக்கமுடியும்?

எரிகிற விறகை இழுத்தெறிந்து விட்டால் உலையில் அரிசி எப்படிக் கொதிக்க முடியும்?

எல்லோருக்கும் எளிதில் புரிகிற பிரச்சினைகள் இவை! ஆனால் எல்லாம் தெரிந்த அரசாங்கத்திற்கு ஏனோ இந்த எளிய உண்மை மட்டும் புலனாக மறுக்கிறது!!

1952-ல், ஆதித்திராவிட மாணவர்களுக்கெல்லாம் ஆரம்பக் கல்வி இலவசம் என்கிற திட்டத்தைக் கொண்டுவந்த போதும், அரசாங்கத்தார், இப்படித்தான், முதலில், மிகக் குறைந்த ஒரு நஷ்டஈட்டு விகிதத்தைக் குறிப்பிட்டுக் காட்டி, அதன்படிதான் தொகையை அளிக்கமுடியும் என்று தெரிவித்தனர்.

M. E. R. விதிகளில் விதிக்கப்பட்டுள்ளதைவிட இரண்டு மடங்கு என்பதுதான் அவர்கள் அன்று குறிப்பிட்ட விகிதம்.

அந்த விகிதத்தின்படி நஷ்டஈடு அளிக்கப்பட்டால் பள்ளிக் கூடங்களை நடத்தவே முடியாது என்பதை நிர்வாகிகள் உடனே எடுத்துக்காட்டினர்.

இந்தப் பிரச்சினையை முன்னிட்டுப் பெரியதோர் கிளர்ச்சி மூண்டது.

ஆகாது இந்த விகிதம்—கூடாது இந்தக் கொடுமை என்பதை எல்லோரும் எடுத்து விளக்கினர்.

இறுதியில் அரசாங்கத்தார், 1952–ல், அதாவது ஆதித்திராவிட மாணவர்களுக்கு இலவசக் கல்வி என்கிற திட்டம் வருவதற்கு முன்னால், எந்தெந்தப் பள்ளிகளில் எந்தெந்தக் கட்டணங்கள் நடைமுறையில் இருந்து வந்தனவோ, அதே விகிதங்களின்படி நஷ்டஈடு அளிக்க ஒப்புக்கொண்டனர்.

இப்போதும் அதே முறையைத்தான் அரசாங்கம் கையாள வேண்டும்.

அப்படிக் கையாள்வதுதான் நியாயம்.

அப்படிக் கையாண்டால்தான், ஆரம்பப் பள்ளிகள் தொடர்ந்து நடக்கமுடியும்.

இல்லையானால், பெரும்பாலான பள்ளிகள், அரசாங்கம் தருகிற நஷ்டஈட்டைக் கொண்டு நடத்த முடியாமல் திண்டாடித் திணறித் தத்தளிக்க நேரிடும்.

வரவு சிறிதளவாகவும், செலவு பேரளவாகவும் இருக்கும் சிக்கலைத் தீர்க்கமுடியாமல், ஆரம்பப் பள்ளிகள் பல மூடப்படவேண்டிய நெருக்கடியும் நேரிடும்.

ஆரம்பப் பள்ளிகள் புதிது புதிதாகத் திறக்கப்பட்டு, கல்வியின் மணம் திக்கெட்டும் பரப்பப்படவேண்டிய இந்தக்காலத்தில், இருக்கும் ஒரு சில பள்ளிகளும் மூடப்படுமானால் அதனால் நம் நாட்டுக்கும், நாட்டின் எதிர்காலத்திற்கும் மிகப் பெரிய தீமையே விளையும்.

அதிலும் இந்த மாநிலத்தின் கல்வித் துறையில் எயிடட் பள்ளிகள் ஆற்றியுள்ள பணி தனிப்பெருஞ் சிறப்பு வாய்ந்ததாகும். நாம் பலமுறை தெரிவித்திருக்கிறோம்—இந்த மாநிலத்தில் முதன் முதலில் ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்கியவர்கள், எயிடட் நிர்வாகிகளே ஆவர். ஜில்லா போர்டுகள், முனிசிபாலிடிகள் முதலிய உள்ளாட்சி

மன்றங்கள் இந்தத் துறையில் நுழைவதற்கு முன்னாலேயே, கிழக்கிந்தியக் கம்பெனியார்கள் இந்த நாட்டை ஆட்சிபுரிந்து வந்த அந்தப் பழங்காலத்திலிருந்தே, எயிடட் நிர்வாகிகள்தான், ஆரம்பப் பள்ளிகளை நடத்தி வருகின்றனர். முன் நாளிலும் சரி, இப்போதும் சரி, மொத்தமுள்ள ஆரம்பப் பள்ளிகளில் ஏறத்தாழப் பாதிப் பள்ளிகளை எயிடட் நிர்வாகிகள்தான் நடத்தி வருகின்றனர்.

அரசாங்கம், முனிசிபாலிடி, ஜில்லா போர்டு, பஞ்சாயத்து போர்டு இந்த நால்வகை நிறுவனங்களும் சேர்ந்து மொத்தம் எத்தனைப் பள்ளிகளை நடத்தி வருகின்றனவோ, அதே அளவு பள்ளிகளை, எயிடட் நிர்வாகம் மட்டும் நடத்தி வருகிறது.

இந்த அளவுக்கு சீரும் சிறப்புடனும் ஆரம்பக் கல்வியை வளர்த்துவரும் எயிடட் நிர்வாகத்திற்கு மிகப் பெரிய ஆபத்தை உண்டுபண்ணுவதாக இருக்கிறது இப்போது அரசாங்கம் பிறப்பித்துள்ள உத்தரவு.

எயிடட் நிர்வாகத்திற்கு ஆபத்து என்றால், ஆரம்பக் கல்விக்கே ஆபத்து என்பது பொருள்.

ஆரம்பக் கல்விக்கு ஆபத்து என்றால் இந்த நாட்டின் நல்வாழ்வுக்கே இடையூறு என்று அர்த்தம்.

எனவே, அரசாங்கத்தார், 14–9–55 அன்று அவர்களால் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவை அன்புகூர்ந்து திரும்பப் பெற்றுக் கொண்டு, கீழ்க்கண்ட முறையில் புதியதோர் உத்தரவைப் பிறப்பித்தால்தான் எயிடட் பள்ளிகளும் ஓங்கி வளர முடியும். கல்வியின் எதிர்காலமும் சிறந்து திகழ இயலும்.

**1. 1951–52 அல்லது அதற்கு முன்னாலிருந்து இருந்து வரும் எயிடட் பள்ளிகளுக்கு, 1951–52–ல் அவர்களால் வசூலிக்கப்பட்ட கட்டணங்களின்படி நஷ்டஈடு அளிக்கப்படும்.**

**2. 1951–52–க்குப் பின்னால் தொடங்கப்பட்ட எயிடட் பள்ளிகளுக்கு, அரசாங்கத்தார் இப்போது அறிவித்துள்ள விகிதங்களைவிட மூன்று மடங்கு அதிகமான விகிதப்படி நஷ்டஈடு அளிக்கப்படும்.**

இப்படி ஒரு உத்தரவு பிறந்தாக வேண்டும்—ஆரம்பப் பள்ளிகள் இருந்தாக வேண்டுமானால்—நாட்டின் எதிர்காலம் ஒளி வீச வேண்டுமானால்! ★

# காலமும் கருத்தும்

## இந்தக் காலத்திலுமா இந்தப் போக்கு?

"மூடநம்பிக்கைதானே! அது ஓர் அருவருக்கத்தக்க பொருளாயிற்றே! நசுக்கிப் போடு அதை! உம்! சீக்கிரம்! ஒரு கணமும் தயங்காதே!" என்று அறிவுரை பகர்ந்தான் பிரஞ்சு நாட்டுச் சிந்தனைச் சிற்பி வால்டேர். ஆனால் இந்த நாட்டிலோ, மூடநம்பிக்கையை நசுக்கிப் போடாதவர்கள்—போடத் துணியாதவர்கள் இன்னமும் ஏராளமாக இருக்கிறார்கள். மூடநம்பிக்கையை நசுக்காதது மட்டுமா, மூடநம்பிக்கையையே தங்களுடைய வாழ்க்கைக்கு வழிகாட்டும் வான்பொருள் என்று இன்னமும் கருதிக்கொண்டிருக்கிறார்கள். மூடநம்பிக்கையை ஒரு தேவனாக்கி, அந்தத் தேவனுக்குத் தேங்காய் பழம் சூடம் சாம்பிராணி இத்தனையையும் காட்டி, விழுந்து விழுந்து வணங்கிக் கொண்டிருக்கிறார்கள். வாழ்க்கையின் எந்தப் பகுதியிலும், எந்தச் சமயத்திலும், எந்தக் காரியத்திற்கும், மூடநம்பிக்கையின் முட்டாள் துணையையே நாடி அலையும் நைந்த உள்ளம் படைத்தவர்களாக இருக்கிறார்கள். அர்த்தமற்ற நம்பிக்கைகளும் அவசியமற்ற எண்ணங்களும்தான் நம்முடைய மக்களின் உள்ளங்களை இன்னமும் ஆண்டுகொண்டிருக்கின்றன.

அஸ்ஸாம் ராஜ்யத்தில், கரீம்கன்ஜ் என்றோர் நகரம். அங்கே ஓர் அச்சுக்கூடம். அந்த அச்சுக்கூடத்திலே ஒரு பெரிய அச்சு இயந்திரம். இரண்டு கிழமைகளுக்கு முன்னால், அது திடீரென்று வேலை செய்யவில்லை. இயந்திரம் வேலை செய்யவில்லை என்றால் என்ன பொருள்? அதிலே ஏதோ கோளாறு இருக்கிறது என்று பொருள். கோளாறு போகவேண்டுமானால், இயந்திரக் கலையிலே வல்லவனை அழைத்து, இயந்திரத்தின் எந்தப் பகுதியிலே என்ன பழுதிருக்கிறது என்பதைக் கண்டுபிடித்து, அந்தப் பழுதைச் சரிசெய்யவேண்டும். இதுதானே முறை! இதைத்தானே சர்வசாதாரண அறிவு படைத்தவர்களும் செய்வர்! இப்படிச் செய்தால்தானே இயந்திரம் மீண்டும் ஓடமுடியும்! ஆனால் இப்படிச் செய்யவில்லை கரீம்கன்ஜ் அச்சுக்கூட நிர்வாகிகள்!

ஓடோடிச் சென்று புனிதமான தண்ணீரைக் கொண்டு வந்தார்களாம்! அந்தத் "திவ்வியமான தீர்த்தத்"தால் இயந்திரத்தை நீராட்டினார்களாம்!

துளசி இலைகளை ஏராளமாகக் கொண்டுவந்து இயந்திரம் முழுவதும் பரப்பினர்களாம். தாங்களும் புனிதமான தண்ணீரில் குளித்து முழுகினர்களாம். பிறகு இயந்திரத்தின் எதிரே உட்கார்ந்துகொண்டு, எண்ணற்ற மந்திரங்களை உச்சரிக்கலானார்களாம்! இயந்திரம் ஓடாததற்குக் காரணம், அதிலே ஏதோ சில பேய்கள் புகுந்துகொண்டிருப்பதுதான்! அந்தப் பேய்களை ஓட்டவேண்டுமானுல் ஆண்டவனின் அருள் தேவை! அந்த அருளைப் பெற வேண்டுமானுல் புனிதமான நீரில் முழுகிப் புனிதமான மந்திரங்களை உரைத்திடவேண்டும்!!—இப்படி எண்ணியிருக்கின்றனர் அந்த விசித்திர சித்தர்கள்! எப்படியிருக்கிறது விபரீதம்!

இயந்திரம் பழுதாகிவிட்டால் அதனைச் சரிப்படுத்த இயந்திர நுணுக்கம் அறிந்தவனை அழைக்க வேண்டும். ஆனுல் இவர்களோ துளசி இலைகளையும் தூய மந்திரங்களையும் அழைத்திருக்கிருர்கள்! இயந்திரம் ஓடவில்லை யென்ருல் அதற்குக் காரணம் அதன் பகுதிகள் சில தேய்ந்திருப்பது அல்லது உடைந்திருப்பது! ஆனுல் இவர்களோ அதனுள்ளே பேய்கள் புகுந்திருப்பதுதான் இயந்திரம் ஓடாததற்குக் காரணம் என்று எண்ணியிருக்கிருர்கள்!

இது, கட்டுக் கதை அல்ல—கற்பனை நிகழ்ச்சி அல்ல—நாட்டிலே நடந்திருப்பது—இந்த மாதத்திலே நிகழ்ந்திருப்பது! இப்படி இருக்கிறதே நம்முடைய நாட்டின் மனவளம்—இந்நிலையில் எப்படி ஏற்படும் முன்னேற்றம் இங்கே? சிந்தித்துப் பார்க்க வேண்டும் சிந்தனையின் பயன் தெரிந்த அத்தனைப்பேரும். சிந்தனை வளர, இத்தகு சீர்கேடுகள் தொலைய, அவர்கள் அரும்பணி ஆற்றவும் முன்வரவேண்டும்.

## குலதெய்வத்திற்குப் பலி, குலக் கொடியா?

மூடநம்பிக்கை, நம் மக்களின் உள்ளத்தை எந்த அளவுக்கு ஆட்டிப் படைக்கிறது என்பதை விளக்க, இதோ மற்ருேர் எடுத்துக்காட்டு! இந்த நிகழ்ச்சி, ஒரிசா என்னும் பகுதியில் பவானி பாட்ஞ என்கிற வட்டாரத்தில் நடந்திருப்பது!

தனது குலதெய்வத்திற்குக் காணிக்கை செலுத்துவதாகப் பிரார்த்தனை செய்திருந்தான் ஒருவன். அதற்காக ஆடு ஒன்றை வளர்த்துவந்தான். ஒருநாள் அவனுக்கு உடனடியாகப் பணம் தேவைப்பட்டது. ஆகவே அந்த ஆட்டை விற்றுப் பணத்தைத் தேடி அந்தப் பணத்தைச் செலவும் செய்துவிட்டான். குலதெய்வத்திற்குப் பலி தரவேண்டிய குறிப்பிட்ட நாள் நெருங்கி வந்தது. ஆனுல் அவனிடமோ, மற்ருேர் ஆடு வாங்குவதற்குத் தேவையான பணம் இல்லை. என்ன செய்வது என்றே அவனுக்குப் புரியவில்லை. கைகளைப் பிசைந்து கொண்டான்; கண்ணீர் விட்டுக் கதறினுன்; அந்தோ

என்ன செய்வேன் என்று அலறினான். குறித்த நாளன்று பலியைத் தராவிட்டால் கடுங்கோபம் கொள்வாரே கடவுள் என்றெண்ணி நடுங்கினான். அந்த நடுக்கம் காரணமாக, இறுதியில், தனது எட்டு வயது மகனையே அவன் தெய்வத்திற்குப் பலியிட்டிருக்கிறான்!

எத்துணைக் கொடுமை! எவ்வளவு பரிதாபம்! பெற்ற மகனையே, அருமைக் குழந்தையையே பலியிட்டிருக்கிறான் தகப்பன்! எந்தப் பிள்ளையை, கண்ணே மணியே கற்கண்டே கனிரசமே என்று கொஞ்சிக் கொஞ்சி அழைத்திருப்பானோ, எந்தப் பிள்ளையைப் பேசும் பொற் சித்திரமே — தூசுகள் அற்ற திருவிளக்கே—மாசு படியாத மாணிக்கமே என்றெல்லாம் போற்றிப் போற்றிப் புகழ்ந்திருப்பானோ, எந்தப் பிள்ளை பிறந்ததும் பெறமுடியாத பெரும் பேற்றைப் பெற்றுவிட்டதாக எண்ணிப் பெருமகிழ்ச்சி அடைந்திருப்பானோ, எந்தப் பிள்ளையைத் தன்னுடைய உயிருக்கு உயிராக, உயிரினும் மேலானதாக எண்ணி வளர்த்தானோ, அதே பிள்ளையை, அந்த அருமைச் செல்வத்தை, அந்த அழகிய உயிரோவியத்தை, அப்பா அப்பா என்று அன்போடு அழைத்துவந்த அந்த இளைய ரோஜாவை, எட்டு வயது மதலையைத் தானே வெட்டி வீழ்த்தியிருக்கிறான்.

நினைக்க நினைக்க நெஞ்சத்தைப் பஞ்சு பஞ்சாக்கும் சம்பவம் இது. மகன் கொல்லப்பட்டிருக்கிறான் — தந்தையாலேயே கொல்லப் பட்டிருக்கிறான்—வெட்கத்தோடோ வேதனையோடோ அல்ல, ஒரு மகத்தான கடமையை நிறைவேற்றிவிட்டோம் என்கிற திருப்தியோடு கொல்லப் பட்டிருக்கிறான். காரணம் என்ன இதற்கு?

கடவுள் நமக்குச் செய்கிற நன்மைகட்குப் பதிலாக நம்மிடமிருந்து சில நன்மைகளை எதிர்பார்க்கிறார் என்று எண்ணுகிற எண்ணம் ஒன்று.

அவருக்கு நாம் காட்டும் நன்றி, பலியின் வடிவத்தில் இருக்க வேண்டும். ஆடோ கோழியோ மாடோ மனிதனோ ஏதோ ஒன்றைப் பலியிட்டால்தான் ஆண்டவனுக்கு ஆத்ம திருப்தி ஏற்படும் என்று நம்புகிற நம்பிக்கை மற்றொன்று.

இப்படிப்பட்ட பலிகளையெல்லாம் செய்து நம்முடைய நன்றியறிதலைத் தெரிவிக்காவிட்டால் கடவுளுடைய கடுங்கோபம் நம்மைச் சுட்டுப் பொசுக்கிவிடும் என்கிற அச்ச நினைப்பு மற்றொன்று.

இந்த மூவகை மூடநம்பிக்கைகளின் விளைவுதான், ஒரிசாவில் நடந்த இந்த நிகழ்ச்சி. கேட்கவே கோரமாக இருக்கிறது—என்றாலும் நடந்திருக்கிறது சம்பவம்—நம்முடைய நாட்களிலே! விஞ்ஞானம் வேகமாக வளர்

துள்ள இந்தப் பகுத்தறிவு சகாப்தத்திலே! மக்களுடைய உள்ளத்திலே இத்தகு மூடுபனி நிறைந்திருக்கிற வரையில், அறிவும் தெளிவும் அங்கே எப்படிப் பரவமுடியும்? நம் நாடு மிகச் சிறந்த திருநாடு என்கிற நிலையை அடைய வேண்டுமானால் இத்தகு மூடநம்பிக்கைகள் விரைவில் வெட்டிப் புதைக்கப்பட வேண்டும்.

## வீணான எதிர்ப்பு—வேண்டாத பிரச்சினை

இப்படித்தான் சொல்லத் தோன்றுகிறது மதிப்பிற்குரிய அன்பர் ஆச்சாரியார் தொடங்கியுள்ள பி.சி.ஜி. எதிர்ப்புக் கிளர்ச்சியை எண்ணிப் பார்க்கும்போது. பி. சி. ஜி. ஊசிகளைக் குத்துவது கூடாது—அதனால் தீமைகள் விளையும்—தவறுகள் நேரும்—ஆபத்துகள் உண்டாகும்—கூடாது இந்தக் கொடுமை—ஆகாது இந்த அநீதி என்றெல்லாம் வீர முழக்கமிடுகிறார் முன்னாள் முதல்வர் ஆச்சாரியார். இவர் யார் இதனைக் கூற? இவரென்ன தலைசிறந்த டாக்டரா? அல்லது புகழ்பெற்ற விஞ்ஞானியா? அல்லது பி. சி. ஜி. கலையில் நிபுணரா? யார் யார் பி.சி.ஜி. துறையில் நிபுணர்களோ, யார் யார் இந்த நாட்டின் தலைசிறந்த டாக்டர்களோ, யார் யார் இந்தத் துறையில் கற்றுத் தேர்ந்த வல்லவர்களோ, யார் யாருக்கு இந்தத் துறைபற்றிப் பேச அதிகாரமும் ஆற்றலும் உண்டோ அவர்கள் அத்தனைப் பேரும் பி. சி. ஜி.யால் தீமைகள் இல்லை என்று தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

சோவியத் ரஷ்யாவில், எல்லாக் குழந்தைகளுக்கும், மூன்று வயதாயிருக்கும்போது, இந்த ஊசி குத்தப்படுகிறது, இரண்டாவது முறையாக குழந்தைகளுக்கு ஐந்து வயதாகும்போது இந்த ஊசி குத்தப்படுகிறது. பிரிட்டனில், எல்லாக் குழந்தைகளுக்கும், ஐந்து வயதாகும் போது இந்த ஊசி குத்தப்படுகிறது. ஜப்பானில் ஏராளமான குழந்தைகளுக்கு இந்த ஊசி குத்தப்படுகிறது. ஐரோப்பாவில் பற்பல நாடுகளிலும் இப்படியே குத்தப்படுகிறது.

பி.சி.ஜி. என்னும் காசநோய்த் தடுப்பு ஊசி குத்தப்பட்டதன் காரணமாக அது குத்தப்பட்ட நாடுகளிலெல்லாம், காசநோயின் கொடுமையும் கடுமையும் குறிப்பிடத்தக்க அளவு குறைந்திருக்கிறது.

ஐக்ய நாடுகள் மன்றத்தின் சுகாதாரப் பிரிவினரும், இந்த ஊசி குத்துவது மிகவும் நல்லது என்று தெரிவித்திருக்கின்றனர். இவ்வளவையும் அறிந்த பின்னர்தான், இந்திய அரசாங்கத்தார், இந்த நாட்டிலுள்ள குழந்தைகளுக்கு, பி.சி.ஜி. ஊசி குத்துவது என்பதை, மிகப் பெரிய அளவிலும் பாராட்டத்தக்க முறையிலும் நடத்தி வருகின்றனர்.

நிலைமை இப்படி இருக்கும் போது, திடீரென்று, அன்பர் ஆச்சாரியார் ஒருவர் மட்டும்,

இதனை எதிர்த்து போர்க்கோலம் பூண்பது முறையுமல்ல. அதனால் நாட்டிற்கு நன்மையும் கிடையாது. பி. சி. ஜி.யைப் பற்றித் தீர்ப்பு அளிக்க வேண்டியவர்கள் மருத்துவத்துறை நிபுணர்கள். அவர்கள் அத்தனைப் பேரும், அது நியாயமானது—நல்லது—சிறந்தது — தேவையானது என்று தெரிவித்துவிட்ட பிறகு அந்தத் துறையில் நிபுணரல்லாத ஆச்சாரியார், அது தவறானது—குற்றமுற்றது — பழுது நிறைந்தது—தேவையற்றது என்றெல்லாம் பேசினால், அதனை நடுநிலை உள்ளம் படைத்த எவரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

ஆச்சாரியார் கூரிய அறிவும் நிறைந்த ஆற்றலும் படைத்தவர். திறமை பல வாய்ந்தவர். அவருடைய அறிவும் ஆற்றலும் சமுதாயத்திற்குப் புதுவாழ்வு அளிக்கும் புனிதமான செயல்களுக்குப் பயன்பட வேண்டுமே தவிர, இப்படிப்பட்ட தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்கி வளர்ப்பதில் செலவிடப்படுவது கூடாது. யானை மீதேறிக்கொண்டு புலி வேட்டைக்குப் போகவேண்டியவர்கள் ரிக்ஷா மீது ஏறிக்கொண்டு கொசு வேட்டைக்குப் போனால் அது அறிவுடைமை ஆகாது. அதனால் எவருக்கும் எந்த அளவும் நன்மை விளையாது.

**அற்புதங்களைச் செய்யும் அதிசய சக்தி!**

குறிப்பிட்ட பயிரைக் குறிப்பிட்ட காலத்தில் விதைத்தால்தான் முளைக்கும்—குறிப்பிட்ட காலம் கடந்த பிறகுதான் கதிர் முற்றி அறுவடைக்குத் தயாராகும் என்பதுதான் இதுவரை இருந்து வருகிற இயற்கை நியதி. எந்தப் பயிரை வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் விதைத்துவிட முடியாது — விதைத்தால் முளைக்காது. அது போலவே எந்தப் பயிரையும் எப்போது தேவைப்பட்டாலும் அறுத்துவிட முடியாது—அறுப்பதற்குக் கதிர்கள் முற்றியிருக்க மாட்டா. விஞ்ஞானம் ஏதேதோ துறைகளில் எத்தனையோ அற்புதங்களை விளைவித்திருக்கிறது என்றாலும், பயிர்களை விதைப்பதற்கும் அறுப்பதற்கும் இயற்கையால் விதிக்கப்பட்டிருக்கிற கால அளவினை இதுவரை மாற்றி அமைக்க முடியவில்லை. ஆனால் இந்தத் துறையிலும், இப்போது விஞ்ஞான அறிவு, வேகமாக வேலை செய்யத் தொடங்கியிருக்கிறது. இத்தாலி நாட்டு விஞ்ஞானிகள், அணுச்சக்தியின் மூலமாக, பருவமில்லாத காலத்தில் விதைக்கப்பட்ட கோதுமை விதைகளை, செழித்து வளர்ந்து நிறைந்த கதிர்களை அளிக்கும்படி செய்திருக்கிறார்களாம். பருவமில்லாத காலத்தில் விதைக்கப்பட்ட விதைகள் என்பது மட்டுமல்ல, நியாயமாகக் கோதுமை விளைவதற்குத் தேவைப்படும் காலத்தைவிட ஐந்து மாதங்கள் குறைவான காலத்திலேயே — 64 நாட்களிலேயே—அணுச்சக்தியைப் பயன்படுத்திய கோதுமைச் செடிகள் உயர்ந்து வளர்ந்து அறுவடைக்

குத் தயாராகி விட்டனவாம். சாதாரண அளவைவிட இப்போது 45 சதவிகிதம் அதிகப்படியான விளைவும் கிடைத்திருக்கிறதாம்.

ஆம்! விதைக்கும் பருவம்— அறுக்கும் பருவம் இரண்டையுமே மாற்றியிருக்கிறது அணுச்சக்தி; மனித சமுதாயம் பெற்றிருக்கிற மகத்தான வெற்றி இது. அணுச்சக்தி ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்தப்பட்டால் அதனால் அளவிடற்கரிய நன்மைகள் விளையும் என்பதற்கு இது ஓர் சிறந்த எடுத்துக்காட்டு. பருவங்களை மாற்றி அமைத்து விளைவுகளை அதிகப்படுத்துவதற்கு மட்டுமல்ல; கப்பல்களை ஓட்டவும், இயந்திரங்களை இயக்கவும், விளக்குகள் எரிக்கவும், விசிறிகளைச் சுழற்றவும், பாலைவனங்களைப் பழமுதிர் சோலைகளாக மாற்றவும், மலைகளை உடைத்து மண் மேடாக்கவும், ஆறுகளைத் திருப்பி வேறு திசைகளில் ஓட்டவும் அணுசக்தி பயன்படும். குண்டுகள் செய்து பணத்தைப் பாழாக்கிடும் குருட்டுச் செயலுக்கு அதனைப் பயன்படுத்திடாமல், அணுச்சக்தியை, மக்களுக்கு வாழ்வளிக்கும் மாண்புள்ள செயல்களில் ஈடுபடுத்தினால், உலகம் பல அற்புதமான நன்மைகளை நிச்சயமாக அடையமுடியும். அணுச் சக்தி ஆராய்ச்சித்துறையில், விரைவில் இந்தியாவும் ஈடுபட இருக்கிறது என்பதும், இந்தத் துறையில் ஆராய்ச்சி செய்வதற்காக ஐந்தாண்டுத் திட்டத்தில் ஓரளவு பணம் ஒதுக்கப்பட இருக்கிறது என்பதும், மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சியாகும்.

## புறப்பட இருக்கிறது— புதிய நாணயமுறை

“ஒரு ரூபாய்க்குப் பதினாறு அணா; ஓரணாவிற்குப் பனிரண்டு தம்பிடி” என்பது இதுவரையில் நடைமுறையில் இருந்துவரும் ஏற்பாடு. பல நூற்றாண்டுகளாக இந்த ஏற்பாடுதான் நம் நாட்டில் இருந்துவருகிறது. விரைவில் இதில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட இருக்கிறது. இந்திய நாணய முறையை, இப்போது இருப்பதினின்றும் மாற்றி, தசாம்ச முறையை அமுல் செய்வதற்கான மசோதா ஒன்று, இந்திய மக்கள் சபையில் இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிறது.

புதிய முறையிலேயும், ‘ரூபாய்’ என்பதுதான் தொடர்ந்து ஆதார நாணயமாக இருக்கும். அதில் மாறுதல் ஏற்படாது. ஒரு ரூபாய், இப்போது 16 பிரிவுகளாக (அணாக்களாக) இருப்பது மாற்றப்பட்டு, 100 பிரிவுகளாக அமைக்கப்படும். ஒவ்வோர் பிரிவும் ஒரு ‘செண்ட்’ என்று அழைக்கப்படும். செண்ட் என்பதுதான் குறைந்தபட்ச நாணயம். ‘செண்ட்’டை அடிப்படையாக வைத்து நாணயங்கள் வெளியிடப்படும். 25 செண்ட்கள் கொண்டது கால் ரூபாய், 50 செண்ட்கள் கொண்டது அரை ரூபாய்; 100 செண்ட்கள் கொண்டது ஒரு ரூபாய். இதுதான்

புதிய முறை. இந்த முறையில் அணு என்கிற ஓர் அமைப்பும் நாணயமும் இருக்கமாட்டா.

"புதிய நாணய முறை, 15 ஆண்டுகளில் மூன்று கட்டங்களில், அமுல் செய்யப்படவேண்டும்" என்று இதுபற்றி ஆராய நியமித்த குழு தெரிவித்திருக்கிறது. புதிய நாணயமுறை நடைமுறைக்கு வந்தவுடனே பழைய நாணயங்கள் பழக்கத்திலிருந்து நீக்கப்படமாட்டா. புது நாணயங்களுடன் சேர்ந்தாற்போல் பழைய நாணயங்களும் சிறிது காலம் அமுலில் இருக்கும். படிப்படியாகவே அவை திரும்பப் பெறப்படும்.

இந்தப் புதிய முறை, பணம் தொடர்பான கணக்குகள் போடுவதை எளிதாக்கிவிடும். இப்போதுள்ள முறைப்படி, எட்டு ரூபாய்க்கு எத்தனை தம்பிடி என்பதை அறிய வேண்டுமானால், 8 என்பதை 192 என்னும் எண்ணால் பெருக்கவேண்டும். ஆனால் புதிய முறைப்படி, 8 ரூபாய்க்கு எத்தனை செண்ட் என்பதை அறிய 8 என்னும் எண்ணுக்குப் பக்கத்தில் இரண்டு பூஜ்ஜியத்தினைச் சேர்த்தால் போதும். 192 என்னும் எண்ணால் பெருக்குவதையும் வகுப்பதையும்விட, 100 என்னும் எண்ணால் பெருக்குவதும் வகுப்பதும் மிக எளிதில் செய்யப்படக்கூடியவை.

பாங்கிகள், இன்சூரன்ஸ் கம்பெனிகள், தொழிற்சாலைகள், அலுவலகங்கள், வியாபாரிகள் ஆகியவர்களுக்கெல்லாம் இந்தப் புதுமுறையால் மிகுந்த நன்மை உண்டு. பொதுமக்களுக்கும் நன்மைதான். ரூபா அணு பைசா சம்பந்தப்பட்ட பெருக்கல் கூட்டல் கழித்தல் வகுத்தல்களில் எவ்வளவோ திண்டாடுகிறார்கள், மக்கள் இப்போது! அந்தத் தொல்லை இனி இருக்காது அல்லவா?

இந்தத் தசாம்ச முறையினால் நன்மைகள் பல உண்டு என்பதால்தான், உலகத்தில் எத்தனையோ நாடுகள் இந்த முறையைக் கையாண்டு வருகின்றன. நாமும் இதனை ஏற்றுக்கொள்வது நல்லதுதான். தொடக்கத்தில் சிறிதளவு மிரட்சியும் குழப்பமும் பாமர மக்களிடையே இருக்கக்கூடும். ஆனால் புதிய திட்டத்தால் ஏற்படுகிற பல நன்மைகளைப்பார்க்கும்போது இந்தச் சிறிதளவு தொல்லைக்காகத் திட்டத்தைப் புறக்கணிப்பது ஆகாது என்பதே நமது கருத்து.

## ஏமாற்றமா ?
## மறுபடியுமா ?

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு மிகப்பெரிய அளவுக்குப் புறக்கணிக்கப் பட்டுவிட்டது. அந்தத் திட்டத்தின்படி அமைக்கப்பட்ட மிகப் பெரிய தொழிற்சாலைகளும், கட்டப்பட்ட அணைக்கட்டுகளும் வடநாட்டிலேயே நிறுவப்பட்டு, அங்கு உள்ளவர்களுக்கே நலன் தரும் வகையில் அமைந்துவிட்

(55-ம் பக்கம் பார்க்க)

சிறுகதை :

# மோகினிப் பிசாசு

தெ. பா. சம்பந்தன்

I

டக், டக், டக்

"..............."

டக், டக், டக்

"..............."

"குமார்...குமார்.... "...டக், டக், டக்

"யாரது ?"

"நான்தான் கோபால். கதவைத் திற."

அடையாளச் சீட்டை, படித்துக்கொண்டிருந்த புத்தகத்தில் சொருகிவிட்டு எழுந்து போய் நான் கதவைத் திறந்தேன்.

"எவ்வளவு நேரம் கதவைத் தட்டுவது. இவ்வளவு நேரம் என்ன செய்து கொண்டிருந்தாய் ?"—அவனுடைய குரலில் ஒருவித அச்சமும் நடுக்கமும் தொனித்தன. அவன் பேசிக் கொண்டே அறையின் கதவை விசையாக மூடித் தாளிட்டான்.

"நாவல் படித்துக் கொண்டிருந்தேன். சுவாரசியமான கட்டத்தில் சனியன் போல நீ வந்து கெடுத்துவிட்டாய். அதிருக்கட்டும், இவ்வளவு நேரம் நீ எங்கிருந்து வந்தாய் ?"—நான் பேசிக்கொண்டே நடந்தேன். அவன் என்னைப் பின் தொடர்ந்தான்.

"பீச்சுக்குப் போயிருந்தேன்."

"மணி பன்னிரண்டாகப் போகிறதே, இவ்வளவு நேரமா பீச்சிலிருந்தாய் ?"

இதுவரை நான் அவன் முகத்தை உற்றுப் பார்க்கவில்லை. திடீரென்று ஏனோ திரும்பினேன், திடுக்கிட்டுப் போனேன். அவன் கால்கள் 'வெட வெட' வென்று நடுங்கிக் கொண்டிருந்தன. தலைமயிர் அலங்கோலமாகக் காட்சியளித்தது. சவம் போல வெளிரிட்டுப் போன அவன் முகத்தில் முத்து முத்தாக அரும்பின வியர்வைத் துளிகள் என் நெஞ்சையே ஒரு கலக்குக் கலக்கிவிட்டன. அவனுடைய உதட்டின் அடிப்பாகத்தில் ஏற்பட்டிருந்த காயத்தினின்று வழிந்த இரத்தம் உறைந்து போய்க் கிடந்தது. பேச நாவெழாமல் நான் சிலை போல் நின்றேன். சற்று நேரம் அமைதி !

"என்னடா... கன்னத்தில் இரத்தமாக இருக்கிறதே"

—அமைதியைக் கலைத்தது என் குரல்.

"என்ன கூறுவதென்றே எனக்குப் புரியவில்லை. எனக்குப் பயமாக இருக்கிறது குமார்."

"பயப்படாதே, நடந்ததை விவரமாகக் கூறு."

"மோகினிப் பிசாசைப்பற்றி நீ கேள்விப்பட்டிருக்கின்றாயா?"

"இல்லை."

"எவனோ ஒருவன் தன் மனைவியை அடித்து நொறுக்கி, இரும்பு வாராவதி இருக்கிறதே அதன் மேலிருந்து பிடித்துத் தள்ளிவிட்டானாம். அதிலிருந்து அவளுடைய ஆவி அங்கேயே சுற்றிக் கொண்டிருக்கிறதாம். தினமும் பத்து, பன்னிரண்டு மணிக்கு அது அங்கே உலவ வருமாம். அது கூப்பிடும்போது திரும்பிப் பார்க்காமல் நடக்க வேண்டும். திரும்பினால் அறைந்துவிடும். இது கூட நீ கேள்விப்பட்டதில்லையா?"

"கூறினவன் யார்? கொண்டு வா அவனை இப்படி. ஒரு பொன் பதக்கமாவது பரிசளிப்போம். ஆஹா என்ன கற்பனை! என்ன கற்பனை!!"

"குமார் விளையாடாதே. நான் கூட இத்தனை நாள் நம்பாதிருந்தேன். ஆனால் இன்றைக்குக் கண்கூடாகக் கண்டுவிட்டேன்."

"..............."

"மெரினாவிற்குப் போய்விட்டு வந்துகொண்டிருந்தேன். ஜிலு, ஜிலு வென்று வீசிய கடல் காற்று மனதிற்கு இதமாக இருந்தது. நடக்க நடக்கத் தூரமே தெரியவில்லை. இரும்பு வாராவதியின் அருகில் வரும்போது பின்னால் யாரோ கை தட்டிக் கூப்பிடுவது போல இருந்தது. நம்மைக் கூப்பிடுபவர்கள் யாராக இருக்கலாம் என்று சிந்தித்துக் கொண்டே நின்றேன். கல கலவென்ற சிரிப்பொலியும் சல சலவென்ற வளை ஒலியும் ஒன்றன்பின் ஒன்றாக என் செவியைத் தாக்கின. உடனே எனக்கு மோகினிப் பிசாசின் நினைவு வந்தது. பயந்து விரைவாக நடக்க முயன்றேன். ஆனால் அந்தப் பிசாசு இரண்டெட்டில் ஓடிவந்து என் இரு கரங்களையும் கெட்டியாகப் பற்றிக்கொண்டு என் ராசா என்று கூறி மறுபடியும் சிரித்தது. நான் உடனே அதன் பிடியை உதறித் தள்ளிவிட்டு நடக்க யத்தனித்தேன். ஆனால் மறு கணம் அதன் கை என் கன்னத்தைத் தாக்கிற்று..."

"போதும் நிறுத்திக்கொள். இதையெல்லாம் நான் நம்பமாட்டேன். மோகினியாவது பிசாசாவது எல்லாம் சுத்த ஹம்பக்."

"என் முகத்தில் உள்ள காயத்தைப் பார்த்த பின்னுமா குமார் உனக்கு நம்பிக்கை யேற்படவில்லை".

நான் அவனுக்கு ஒன்றும் மறுமொழி கூறவில்லை. நாவலை விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தேன். வண்டியில் பின் பகு

அதிகமாகி விட்டால் குதிரை ஓடாது. 'இடக்குப்' பண்ணும். மனித மனம் கூட அப்படித் தான் போலும்! எவ்வளவுதான் முயன்று பார்த்தாலும், கோபால் கூறிய மோகினிப் பிசாசைப்பற்றித்தான் மனம் சிந்திக்கலாயிற்றே தவிர, நாவல் படிப்பதில் மனம் ஓடவில்லை. புத்தகத்தை அப்படியே மூடி வைத்துவிட்டு உறங்கிவிட்டேன்.

## 2

மறுநாள் இரவு எப்பொழுது மணி 12 ஆகும் என்று காத்துக் கொண்டிருந்தேன். கடல் ஓரே இரைச்சல் போட்டுக் கொண்டிருந்தது. பாதையில் வரிசையாக அமைக்கப்பட்டிருந்த 'மெர்குரி' விளக்குகள் தூரப் பார்வைக்கு வரிசையாக அடுக்கப்பட்ட விண்மீன்கள் போலக் காட்சியளித்தன. அருகில் இருந்த ஒரு விளக்கு பூர்ண சந்திரனுக்காவது களங்கம் உண்டு. ஆனால் எனக்குக் களங்கமே கிடையாது என்று கர்வத்தோடு கூறுவது போல நிமிர்ந்து நின்றுகொண்டிருந்தது. தொலைவில் இருந்த 'பிரஸிடென்ஸி கல்லூரிக்' கடிகாரம் மணி 12 என்பதை அறிவித்தது. நான் துண்டை உதறிப் போட்டுக் கொண்டு 'டார்ச்'விளக்கை ஒரு முறை எரிகிறதாவென்று பரிசோதித்துவிட்டு இரும்பு வாராவதி நோக்கி நடந்தேன். என் உள்ளம் ஏனோ படபடத்தது. துரிதமாகத் துடித்த இருதயத்தின் வேகம் காதில் தெளிவாகப் புலப்பட்டது.

திடீரென்று யாரோ என்னைக் கைதட்டி அழைக்கும் ஒலி பின்புறமிருந்து வந்தது. கால்கள் துவள ஆரம்பித்தன. என் வேகம் மட்டுப்பட்டது. கல கல வென்று ஒரு பெண் சிரிப்பது போன்ற ஒலி கிளம்பிற்று. என் இருதயம் வேக வேகமாக ஓடிற்று. ஆனால் தைரியத்தை முயன்று வரவழைத்துக்கொண்டேன். தூரத்தில் மங்கலாக ஒரு உருவம் வருவது தெரிந்தது. நிமிஷத்திற்கு நிமிஷம் எங்களுக்கிடையே இருந்த தூரம் குறைந்து கொண்டே இருந்தது. அருகில் நெருங்கி அப் பெண் உருவம் ஒரு 'வெண்கலச் சிரிப்பு' சிரித்தது. கண்களுக்கடுத்தபடியாகப் பெண்கள் உபயோகப்படுத்தும் வசீகர ஆயுதமல்லவா சிரிப்பு!

ஒன்றுமே விளங்காது நான் சிலைபோல அசைவற்று நின்று கொண்டிருந்தேன். அடுத்த கணத்தில் அதனுடைய குளிர்ந்த விரல்கள் என் கரங்களைத் தீண்டி ஸ்பர்சித்தன. ஆனால் நான் மறுகணமே 'டார்ச்சின்' விசையை அழுத்தினேன். 'குபீ' ரென்று ஒளி கிளம்பிற்று. என் எதிரே நான் நிற்கக் கண்டேன், மோகினிப் பிசாசையல்ல, ஆனால் அழகே உருவெடுத்த ஓர் பெண்ணை! திடீரென்று ஏற்பட்ட ஒளி அவளுடைய கண்ணைக் கூசிடச் செய்தது. அவள் இமைகளை மூடி மூடித் திறந்

ததே ஒரு அழகாகத்தான் இருந்தது!

இமைப்போதில் விளக்கை அணைத்துவிட்டு அவளுடைய இரு கரங்களையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டேன். அவள் இதை எதிர்பார்க்கவில்லை, ஸ்தம் பித்துப் போனாள்.

"நீ யார்? உனக்கிங்கென்ன வேலை?"

"ஐயையோ...என் கையை விடு ஐயா"

தப்பித்துப் போகத்தான் தந் திரம் செய்கிறாள் என்று நான் எண்ணினேன். ஆனால் அவ ளுடைய பரிதாபகரமான குரல் என் மனத்தை இளக்கிற்று. நான் அவள் கையை விடவில்லை; என்றாலும் பிடியைச் சற்று தளர்த்தினேன்.

"ஐயா, உனக்குப் புண்ணிய மாகப் போகிறது. என் கையை விடுயா. கையிலே காயம், வலிக் கிறது." உருகாத உள்ளத்தையும் உருகவைக்கும் சக்தி அவ ளுடைய அந்தக் குரலில் இருந் தது. நான் அவள் கையை நழுவவிட்டேன்.

"கையில் காயமா? என்ன காயம்? எப்படிப் பட்டது?"

"நேற்று ஒருவர் இந்தப் பக் கம் வந்தார். நான் அவர் கை யைப் பற்றினேன். ஆனால் அவர் உதறித் தள்ளினார். எனக்கு வந்த கோபத்தில் ஓங்கி ஒரு அறை விட்டேன். வளையல் உடைந்து போத்துக்கொண் டது."

"ஆமாம் நீயேன் இப்படி போகிறவர் வருகிறவர்களைத் தொந்தவு செய்கிறாய்?"

"அது தானய்யா என் பிழைப்பு."

"பிழைப்பா?"

"ஆம் நான் ஒரு விபசாரி. இணங்கினவர்களுக்கு நான், இன்பவல்லி, இணங்காதவர் களுக்கு..."

"இணங்காதவர்களுக்கு?"

"இணங்காதவர்களுக்குப் பேய்."

"இல்லை, மோகினிப் பிசாசு என்று கூறு."

"அப்படித்தான், வைத்துக் கொள்ளுங்களேன்."

"இறந்து போன துன்மார்க் கர்களுடைய ஆவிதான் பிசாசாக உலவும் என்று நான் கேள்விப் பட்டிருக்கின்றேன்..."

"ஆனால் நான் காம வெறி பிடித்த ஓர் துன்மார்க்கனின் தீச்செயலால் இன்று விபசாரி யாக நடமாடுகின்றேன்."

"............"

"ஏன் வாயடைத்துப்போய் விட்டீர்கள்? சூடான இட்டிலியி னின்று மென்மையான ஆவி கிளம்புவதைப் போல என் புண் பட்ட இருதயத்தினின்று ஆத் திரம்தான் வெளிவருகின்றது.

தயவு செய்து என் சோகக் கதையைக் கேளுங்கள். எனக்கு ஆறுதல் கூறுங்கள். என்னால் வேதனை பொறுக்க முடிய வில்லை.''

நான் ஓர் கல்லில் அமர்ந் தேன். ' அவளும் என் எதிரே அமர்ந்தாள்.

" உலகத்தில் பெரும்பாலோர் வாழவேண்டும் என்ற ஆசையை உள்ளடக்கியவர்களாகத்தான் இருக்கிறார்கள். நானும் வாழத் தான் ஆசைப்படுகிறேன். இல்லா விட்டால் விபசாரி என்ற விரு தோடு நான் இன்னும் உலகத் தில் உலவிக்கொண்டிருப்பேனா? ஆசை வெட்கமறியாது என்று உலகத்தவர் கூறுவார்கள். என் னைக் கேட்டால் ஆசை வெட்க மறியாது என்பது மட்டுமல்ல, மானமும் மரியாதையும் அறி யாது. ஏன்? நீதியையும் நேர் மையையும்கூட அறியாது என் பேன்.

அப்போது நான் ஆறாவது படிவம் படித்துக்கொண்டிருந் தேன். உலகமே இன்னதென்று தெரிந்துகொள்ளாத பருவம்! வெளுத்ததெல்லாம் பால் என்று கொள்ளும் வெள்ளை யுள்ளம்!!

" லல்லி, இப்படி வெகுளியாக இருக்கின்றாயே, நீ எப்படித் தான் இந்த உலகத்தில் பிழைக் கப் போகிறாயோ எனக்கு விளங்கவில்லை!'' என்று அம்மா அடிக்கடி குத்திக் காண்பிப்பார் கள். பள்ளி செல்லும் நேரம் தவிர மற்ற நேரங்களிலெல்லாம் கைதி போல என்னை வீட்டில் அடைத்துவிட்டு, என்னிடம் உலக ஞானத்தை எதிர்பார்ப்பது எவ்வளவு முட்டாள் தனம். உல கத்தைப் பற்றிப் படித்து அறிய முடியாது. பார்த்துத்தான் அறிய முடியும். இது ஏனோ அவருக்கு எட்டவில்லை!

நான் இருந்த வீட்டின் எதி ரில் ஒரு அறையைச் சந்திரன் வாடகைக்கு எடுத்துக்கொண் டிருந்தான். அவனை எனக்கு முன்பின் தெரியாது. ஆனால் ஒரு நாள் மாலை நான் பள்ளிக் கூடத்திலிருந்து வீடு திரும்பும் போது என்னை அணுகி என் நோட்டுப் புத்தகத்தைக் கேட் டான். அன்றுதான் முதன் முதலாக அவனும் ஆறாம் படி வம் படிக்கின்றான் என்பதை நான் அறிந்து கொண்டேன். அன்றுமுதல் நானும் அவனுக் குப் புத்தகங்களைத் தருவேன். அவனும் எனக்கு வேண்டிய புத்தகங்களைத் தருவான். ஒரு நாள் சந்திரன் என்னிடம் ஓர் நாவலை அளித்து அதனைப் படித்துவிட்டுக் கருத்தைக் கூறு மாறு வேண்டிக்கொண்டான். நானும் சம்மதித்தேன். அது ஒரு காதல் கதை. கதாநாயகனே ஓர் சீர்திருத்தவாதி. அவன் சாதி என்ற ஆற்றைக் காதல் என்ற பாலத்தை அமைத்துக் கடக்கிறான். நான் படித்து விட்டு நாவல் சுவாரசியமாக இருப்பதாகக் கூறினேன். அவன் அதற்கு என்ன பொருள் கொண்டானோ எனக்குத் தெரி

யார்தி. ஆனால் "இது உங்களிடமே இருக்கட்டும். உங்களுக்கு இது ஓர் துணைவன்" என்றான். அதிகம் வளர்த்த நான் விரும்பவில்லை. எங்கள் நட்பு எங்களைக் காதலின் கடைசி கட்டத்திற்குக் கொண்டு போய்விட்டது. மரம் பழுத்தால் வௌவாலை வா என்று கூறி வரவேற்கத் தேவையில்லையாம்; அவை தாமாகவே வருமாம். இந்தப் பொறுப்பற்ற மனித சமுதாயத்தில்............ ஆம், சாதி என்ற ஆற்றைக் காதல் என்ற பாலத்தை அமைப்பதன் மூலம் கடக்கலாம் என்று எக்களிப்போடு கூறின சந்திரன் அமாவாசையானார்! என் வயிற்றிலோ 'வளர் பிறை'. என் நிலை எப்படியிருந்திருக்கும். சிந்தித்துப் பாருங்கள். சமுதாயத்தின் சந்தேகக் கண்கள் என்மேல் படையெடுத்தன. நான் வீட்டை விட்டே வெளியேறினேன். வீட்டை விட்டு வெளியேறினால் அபாயம் நீங்கும் என்று நான் போட்ட கணக்கு, பொய்த்துப் போய்விட்டது. நான் முகர்ந்த மலரானேன்." என்று கூறி, பொங்கி வரும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு சிறு குழந்தைபோலத் தேம்பித் தேம்பி அழுதாள். நான் அவள் தலையை நிமிர்த்தி கண்களைத் தொடைத்தி "அழாதே லல்லி, குறையையும் கூறிவிடு" என்றேன்,

"கூறுவதற்கு இன்னுமென்ன இருக்கிறது. அவ்வளவுதான். குளத்தில் கால்இடறி விழுந்தவனாவது மூன்று முறை மேலுக்குக் கிளம்ப முடிகிறது. ஆனால் இந்தப் பாழாய்ப்போன சமுதாயத்தில் வழுக்கி விழுந்த வனிதையர் கரையேற வழியே கிடையாது."

"அப்படி இன்னொருதரம் என்னிடம் சொல்லாதே, லல்லி, இதோ பார் நான் உன்னை ஏற்றுக் கொள்ளுகின்றேன்."

"வேண்டாம். வேண்டாம். தங்கமான குணம் படைத்த உங்கள் வாழ்க்கையை ஒரு சுவையற்ற விருந்தாக்க நான் விரும்பமாட்டேன். நான் ஓர் விபசாரி, என்னை மறந்துவிடுங்கள்."

"விபசாரி......இல்லை. நீ ஒரு மாஜி விபசாரி. ஒரு அருமையான காவியச்சுவடி செல்லரித்து விட்டதென்றால் அதைத் தூக்கித் தூர எறிபவன் முட்டாள். எஞ்சியுள்ள பகுதியைப் பயன் படுத்துபவனே விவேகி."

"ஆமாம். ஆனால் சமூகம் தூற்றுமே."

"ஆம் தூற்றும், முதலில். ஏனென்றால் அது காலங்கடந்த ஞானோதயர்கள் பட்டியலில் சேர்க்கப்படவேண்டிய ஒன்று."

"இதெல்லாம் உண்மையா? அல்லது நான் கனவு காண்கின்றேனா?"

"கனவுதான். ஆனால் நினைவாகிப் போன கனவு இது."

(28-ம் பக்கம் பார்க்க)

# குடையின் கதை

**ஆ. ஜெயராமன்**

"நிழலின் அருமை வெய்யிலில் தெரியும்" என்பது பழமொழி. அந்த நிழலின் அருமையை வேண்டுவார்க்கு வேண்டும்போது தரும் அரும் பண்பைப் படைத்ததுதான் குடை!

குடையின் அருமை பலர்க்குச் சாதாரண நாட்களில் தெரியாது; கடும் வெய்யில் எரிக்கும்போதும், கடுமழை பெய்யும் போதுந்தான் தெரியும்.

குடை, பண்டைக்காலந் தொட்டு, பயன் தரும் ஒன்று என்ற அளவில் மட்டுமல்லாமல், பெருமைக்குரிய ஒன்று என்ற அளவிலேயும் கையாளப்பட்டு வருகிறது. அருமை பெருமைகளை ஒருங்கே பெற்ற குடையின் வரலாறு மிக்கச் சுவையானதாகும்.

குடை என்ற தமிழ்ச் சொல்லுக்கு ஆங்கில மொழியில் 'அம்ப்ரெல்லா' (Umbrella) என்று பெயர். இச்சொல் 'அம்ப்ரா' என்ற இலத்தீன் மொழிச்சொல்லின் அடிப்படையாகப் பிறந்தது என்பர். 'அம்ப்ரா' என்ற இலத்தீன் சொல் நிழல் என்று பொருள் படுவதாகும். குடை நிழல் தரும் காரணத்தால், ஆங்கிலத்தில் அதற்கு 'அம்ப்ரெல்லா' என்ற பெயர் வந்தது. குடை குவிந்து காணப்படும் காரணத்தால் தமிழில் 'குடை' என்று பெயர் பெறுவதாயிற்று.

ஞாயிற்றின் வெங்கதிர் உயிரினங்களின் வாழ்வுக்கு இன்றியமையாது தேவைப்படுவதாகும். ஞாயிற்றின் வெப்பம் இல்லையேல் உயிரினங்கள் அனைத்தும் அழிந்துபோகும். ஒவ்வொரு உயிரினத்திற்கும் ஒரு குறிப்பிட்ட அளவு வெப்பந்தான் தேவைப்படுகிறது. வெப்பத்தின் அளவு மிகக் குறைந்தாலும், மிக மிகப்பட்டாலும் அதனை உயிரினங்களால் தாங்கிக்கொள்ள முடியாது. மிக்க வெப்பத்தினின்றும் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள காட்டுமிராண்டி காலத்து மனிதன் மலைக்குகைகளையோ, மரப் பொந்துகளையோ, மரநிழல்களையோ, செடிப்புதர்களையோ நாடினன். எப்பொழுதுமே அந்த நிழல்களில் அவனால் தங்கியிருக்கமுடியவில்லை. காரணம் அப்படித் தங்கியிருக்கும் நேரத்திலெல்லாம் உணவுக்கு வழி கிடைப்பதில்லை. உணவுக்காக வெய்யிலில் அலைந்து திரியவேண்டிய இன்றியமையாமைக்கு

அவன் அடிக்கடி ஆளாக்கப்பட்டான். வெய்யிலிலும் அலைய வேண்டும், ஆனால் வெய்யிலின் கொடுமையையும் தடுக்கவேண்டும். இதற்கான வழி ஏதும் கிடைக்குமா என்று தன் சிற்றறிவு கொண்டு ஆராய்ந்து பார்த்தான். இலைகளையும், மரப்பட்டைகளையும், விலங்குகளின் தோல்களையும் பயன்படுத்தித், தன்னை அவைகளால் மூடிக்கொண்டு வெய்யிலின் வெம்மையினின்றும் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முயன்றான். ஆனால் அவையெல்லாம் அவன் விரும்பிய முழு வசதியையும் செய்துதரவில்லை. 'பசியே நாகரிகத்தின் துவக்க இடம்' (Hunger is the starting point of Civilization) என்று கார்க்கி கூறியதற்கிணங்க, காட்டுமிராண்டிக் காலத்து மனிதன் தனது பசியாற்றிக்கொள்ளும் முயற்சி நல்ல முறையில் வெற்றிபெற, சூழ்நிலைகளை வசதியானவைகளாக ஆக்கிக்கொள்வதிலே கண்ணுங்கருத்துமாக இருந்தான்.

காலம் சென்றது; மனித நாகரிகமும் சிறிது சிறிதாக வளர்ந்தது. மனித சமுதாயத்தில் மான உணர்ச்சிக்கு மதிப்பு ஏற்பட்டது. தழை, பட்டை, தோல் ஆகியவற்றை ஆடையாக உடுத்திக்கொண்டான். தேவையான போது அவற்றையே குடையாகத் தூக்கிப்பிடித்துக் கொண்டான். மேலும் நாகரிகம் வளர்ந்தது. பருத்தியினாலும், பட்டினாலும் ஆடைகள் செய்யக் கற்றுக்கொண்டான். தான் உடுத்திக்கொண்ட பருத்தித்துணி, பட்டுத்துணி ஆகியவற்றாலேயே தனக்குத் தேவைப்பட்ட குடையையும் ஆக்கிக்கொண்டான்.

தோலையும், மரப்பட்டையையும் தன் கையால் குடையாகத் தூக்கிப்பிடித்துக் கொண்ட போது, நீண்டநேரம் அப்படியே பிடித்துக் கொண்டிருக்க அவனால் முடியவில்லை. கை வலியெடுக்க ஆரம்பித்தது. பிறகு ஒரு கோலினால் அவற்றைத் தூக்கிப்பிடித்துக்கொள்ள முயன்றான். இலையும், தோலும், துணியும் துவண்டு விழாமல் பரந்து நிற்கவேண்டி, சிம்புகளால் படகுபோல் செய்து, அதனைக் கவிழ்த்துக், கோலால் தூக்கிப்பிடித்து, அதன்மீது இலையையும், தோலையும், துணியையும் போட்டுக்கொண்டான். இப்படியாகக் குடை உருவெடுக்கத் தொடங்கியது.

மனிதன் முதலில் வெய்யிலை மறைப்பதற்காக என்றுதான் குடையைக் கண்டுபிடித்தான்; அதுவே மழையினின்றும் அவன் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளப் பயன்பட்டதால், அதற்கும் பயன்படுத்திக் கொண்டான். நாளடைவில் குடை, மனிதனுக்கு, வெய்யில் மழை இரண்டினின்றும் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்கு ஏற்ற ஒரு கருவியாயிற்று.

குடை முதன்முதல் எப்பொழுது தோன்றியது, எங்கு

தோன்றியது என்று யாராலும் திட்டவட்டமாக வரையறுத்துக் கூறிவிட முடியாது. ஆனால் வெம்மைமிக்க நாடுகளில்தான் அது முதன் முதல் தோன்றியிருக்க வேண்டும் என்றுமட்டும் அறுதியிட்டுக்கூறலாம். குடை எல்லாநாடுகளிலும் காட்டுமிராண்டிக் காலத்திலிருந்தே பழக்கத்திலிருந்து வருகிறது என்னலாம்.

மேலைநாடுகளைவிட கீழை நாடுகளில், தொன்றுதொட்டு, குடை பெருவழக்காய் இருந்து வருகிறது. தமிழகம், ஆரியவர்த்தம், சீனம், பாரசீகம், எகுபதியம், அரேபியம், சாலடியம் போன்ற நாடுகளில் குடை பொதுவாகப் பயன்படுத்தப் பட்டுவந்ததோடு, அரசாட்சியின் அடையாளமாகவும், உயர்வின் அறிகுறியாகவும் போற்றப்பட்டு வந்தது.

வெய்யிலின் கொடுமையைத் தடுத்து நிழலைத் தரும் தன்மையைக் குடை கொண்டிருந்ததால், தன் ஆட்சி, இயற்கையாலும்—செயற்கையாலும், உள்நாட்டவராலும்— வெளிநாட்டவராலும், பறவையாலும்—விலங்கினாலும் ஏற்படும் கொடுமையெல்லாம் தடுத்து, ஆட்சியில் அடங்கியிருக்கும் குடிமக்களுக்கு நன்மை புரிவதிலே நாட்டங்கொண்டது என்பதை விளக்கிக்காட்ட, அந்தக் குடையை அரசன் தனக்குமேலே உயர்த்திப் பிடிப்பானாயினான். குடிமக்களைக் காப்பாற்றும் அடையாளமாக அரசன் குடையை உயர்த்திப் பிடிப்பானாயினான். குடிமக்களைக் காப்பாற்றும அடையாளமாக அரசன் குடையை உயர்த்தில் பிடித்ததால், குடைக்குத் தனி உயர்வு ஏற்பட்டது. அந்தக் குடையையே நீதிசெலுத்தும் அடையாளமாகவும், வெற்றி பயக்கும் அடையாளமாகவும் நாளடைவில் கொள்ளத் தலைப்பட்டான். இக்காரணங்கள பற்றித்தான் தமிழகத்தில் அரசன ஏந்திய குடைக்கு 'வெண்கொற்றக் குடை' என்ற பெயர் நிலவுவதாயிற்று. அரசனது குடைக்கு மதிப்பும் உயர்வும் ஏற்பட்டவுடனே, அதற்கு மரியாதை செலுத்துவதும், அதனைப் பல வகையாலும் அழகுபடுத்துவதும் எங்கணும் பெருவழக்காயின. அரசன் குடை ஏந்துவது பெருமைக்குரிய ஒன்று என்று ஆனவுடனே, பெருமை படுத்தப் பட வேண்டும். 'ஆண்டவனு'க்கும்—'மதத்தலைவர்'க்கும் குடை ஏந்தவேண்டும் என்று எண்ணினர். உலகின் எல்லா நாட்டு மன்னர்களும், மடாதிபதிகளும், குறிப்பாகக் கிழைநாட்டு மன்னர்களும் மடாதிபதிகளும் குடை ஏந்தினர். அவரவர்களின் உயர்வுக்கும், ஆணைக்கும், செல்வத்திற்கும், மாண்புக்கும் ஏற்றவாறு குடைகள் தோற்றமளித்தன. அரசர்களைப் பின்பற்றி அமைச்சர்கள், படைத்தலைவர்கள், செல்வர்கள், சிறப்புக்குரியோர் முதலாயினோரும் குடைகள் ஏந்தினர்.

அரசர்களாலும், 'ஆண்டவர்' களாலும் குடை பயன்படுத்தப் படும்போது, அது மழைக்காகவும், வெய்யிலுக்காகவும் பயன் படுத்தப்படுவது என்றில்லாமல், பேருக்காகவும் பெருமைக்காகவும் பயன்படுத்தப்படுவது என்று ஆகிவிட்டது. சிறப்புக்குரிய குடையில் வண்ண ஓவியங்கள் வரைவதும், பொன்—வெள்ளி—முத்து—பவளம்—வைரம்—வைடூரியம்—மரகதம்—மாணிக்கம் போன்ற மணிகளைப் பதிப்பதும், தங்கத்தாலும் வெள்ளியாலும் குடைகள் செய்து, அவற்றில் மணிகளைப் பதிக்கவும் செய்தனர். பல பொருள்களைக் குடையில் பதிக்கவேண்டியிருந்ததாலும், பல வண்ண ஓவியங்களை அதில் தீட்டவேண்டியிருந்ததாலும், அளவிற் சிறியதாய் இருந்த குடை அளவிற் பெருகியது. குடையின் பளுவும் மிகவாயிற்று. எனவே அதைத் தாங்கள் செல்லும்போது எடுத்துவர சில பணியாட்களைக் குடைபிடிப்பதற்கென அரசரும் பிற பெருமக்களும் அமைத்துக்கொண்டனர். அரியணைகளின்மீதும், யானை அம்பாரிகளின்மீதும் குடைகளை வைத்து அழகுபடுத்தினர். இப்பொழுதும் கடவுளின் சிலைகளை ஊர்வலமாக எடுத்துச் செல்லும்போது பெரும் பெரும் குடைகள் அழகுக்காக எடுத்துச் செல்வதைக் காணலாம். தேர்களின் மீது குடை கட்டுவது சிறப்பு கருதிச் செய்யப்படுவதேயல்லாமல், அவசியத்தை ஒட்டிச் செய்யப்படுவதல்ல.

பண்டைத் தமிழகத்தில் தென்னங் கீற்றுக் குடைகளும், பனையோலைக் குடைகளும், தாழங் குடைகளும் சாதாரண மக்களால் பயன்படுத்தப்பட்டன. இப்பொழுதும் தமிழகத்தின் சிற்றூர்ப் பக்கங்களில் அத்தகைய குடைகள் வழக்கத்தில் இருந்துவருவதைக் காணலாம். கைப்பிடி இல்லாமல் மேலே போர்த்திக் கொள்ளுகிற மாதிரியில் தென்னங்கீற்றினாலும், பனை ஓலையினாலும் ஆன 'குடலை' களைக், குடைகளுக்குப் பதிலாகப் பயன்படுத்தும் பண்பு இன்னும் சிற்றூர்ப்புறங்களில் இருந்து வருகிறது.

பண்டைக் கிரேக்கர்களும், உரோமர்களும் குடைகளை அவ்வளவாகப் போற்றிக்கொள்ளவில்லை. யாராவது ஒருவர் குடை பிடித்துக் கொண்டு வந்தால் அவரை யாரும் எள்ளி நகையாடுவது வழக்கம். வெய்யிலுக்கோ அல்லது மழைக்கோ அஞ்சிக் குடைபிடிப்பது கோழைத்தனம் என்றும் பெண்மைப் பண்பின் கூறுபாடு என்றும் கருதினர். குடை, பெண்கள் மட்டுமே பயன்படுத்தவேண்டிய கருவி என்று கொண்டனர். பெண்கள் மென்மை வாய்ந்தவர்களாதலால், அவர்களுக்கு மட்டுமே குடை அவசியமானது என்று கருதினர்.

மேலைநாடுகளுக்குக் குடைகள் சீனாவிலிருந்தும் இந்தியாவிலி

ருந்தும்தான் சென்றன. மேலை நாடுகளுக்குக் கி. பி. பதினேழாம் நூற்றாண்டில்தான் குடை நல்ல முறையில் அறிமுகப்படுத்தப்பட்டது என்னலாம். கி. பி. 1630–ஆம் ஆண்டு வாக்கில் மேலை நாடுகளில் குடை நன்றாக அறிமுகம் பெற்றுவிட்டது. சீன நாட்டுக் குடைகள் பலவாக மேலைநாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டன. சீனக் குடைகள் எண்ணெய்தோய்ந்த பட்டுத் துணியால் பெரும்பாலும் செய்யப்பட்டிருந்தன. குடைகள், உயர்குலப் பெண்கள் மட்டுமே பயன்படுத்தத்தக்கன என்று முதலில் கொண்டனர்.

முதன் முதலில் இலண்டன் நகரத்தின் தெருக்களில் குடையைப் பிடித்துச் சென்றவர் சொனுச் அன்வே (Jonas Hanway) என்பவர் ஆவார். அவர் சீனாவிற்குச் சென்றுவிட்டுத் தம் தாய்நாட்டிற்குத் திரும்பும்போது சீனக்குடை ஒன்றை எடுத்துச்சென்றார். அவர் குடை பிடித்துச் செல்வதைக் கண்ட பொது மக்கள் கேலியும், கிண்டலும் செய்தனர். எள்ளி நகையாடினர். தாம் கொண்டு வந்ததைப்போன்று பல குடைகள் செய்து பல நண்பர்களுக்கும் அவர் கொடுத்தார். முதலில் குடைபிடித்துச் செல்வோரெல்லாம் எள்ளி நகையாடப்பட்டனர். யார் செய்யும் கேலியையும், கிண்டலையும் சற்றும் பொருட்படுத்தாமல் அன்வே குடைபிடித்தலைப் பழக்கமாக்கினர். ஆனால் நாளடைவில் பற்பல விதமான குடைகள் இலண்டன் கடைத்தெருக்களில் விற்பனைக்குக் கொண்டுவரப்பட்டுப், பெரும்பாலோரால் வாங்கப்பட்டன.

இற்றைக்காலத்தில் காணப்படும் துணிக் குடைகள் முதன் முதலில் சிங்கப்பூரிலிருந்துதான் இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டன. 1860-ஆம் ஆண்டில் பம்பாய் வணிகர் ஒருவர் இங்கிலாந்திலிருந்து ஏராளமான குடைகள் வரவழைத்து விற்பனை செய்தார். அவைகள் சாதாரண இந்தியர்கள் வாங்க முடியாத அளவுக்கு மிகவான விலை படைத்தனவாக இருந்தன. 1902-ஆம் ஆண்டில் குடைக் கம்பிகள் கட்டைகள் முதலியன மட்டும் இறக்குமதி செய்யப்பட்டு, மலிந்த விலைக்கு இங்கேயே உற்பத்தி செய்யப்பட்டன. பின்னர் இங்கேயே பல குடை உற்பத்திசாலைகள் தோன்றலாயின.

இந்தியத் துணைக்கண்டத்தின் கலையிலும், இலக்கியத்திலும், வரலாற்றிலும் குடையைப் பற்றிய குறிப்புகள் பல ஆங்காங்கே காணப்படுகின்றன.

பண்டைத் தமிழர்கள் பழம் பெருங் காலந்தொட்டே குடையை நன்கு அறிந்து பயன்படுத்திவந்தனர். கதிரவனின் ஒளிக்கதிர்களைச் சிதறடிக்கவல்லது வெண்குடையே என்பதை அறிந்து, அதனைப் பழக்கத்தில் கொண்டிருந்தனர்.

பண்டைத் தமிழ் இலக்கியங்களில் குடையைப்பற்றிய குறிப்புகள் சிலசில காணக்கிடக்கின்றன.

மலேயாவில் குடையை ஒருவித பாதுகாப்புக்கருவி என்றே கருதி வருகின்றனர். காட்டில் புலி எதிர்ப்பட்டு வரும்போது, அதன் முன் குடையை விரித்தும் மடித்தும் நின்றால், புலி ஓடிவிடும் என்பது அம்மக்களின் நம்பிக்கை.

இன்றைய நிலையில் சப்பானிலும், பர்மாவிலும் தயாரிக்கப்படும் குடைகள் தாம் மிக்க அழகு வாய்ந்தவையாகும். கவர்ச்சிகரமான ஓவியங்கள், அவற்றின்மீது காணப்படும். பர்மியப் பெண்கள், குடைபிடித்துச் செல்வது தான் பெண்களுக்கு அழகுபயக்கும் பற்றுக்கோடு என்று கருதுகின்றனர். பர்மியப் பெண்கள் குடையின்றி வெளியே செல்வது அரிதிலும் அரிது ஆகும்.

குடை ஒருவரால் அழகுக்கும், உயர்வுக்கும் சிறப்புக்கும் அறிகுறியாகப் பயன்படுத்தப் பட்டாலும், கறுப்புத்துணிக் குடை அவசியத்திற்காகப் பலரால் பயன்படுத்தப்படவே செய்கின்றது! ★

—"மன்றம்"

---

(22–ம் பக்கத் தொடர்ச்சி)

3

"கோபால், நாளையிலிருந்து நீ இரவு ஒரு மணிக்குக்கூட இரும்பு வாராவதி பக்கமாகப் போகலாம் வரலாம். ஒரு பயமுமில்லை. நான் அந்தப் பிசாசை ஓட்டிவிட்டேன்."

"உண்மையாகவா? அந்தப் பிசாசை உன்னால் எப்படி ஓட்ட முடிந்தது, குமார்? என்னிடம் விளையாடுகின்றாயா?"

"ஓட்டிவிட்டேன் என்று சொன்னேன். அது தவறு. வீட்டிற்கே அழைத்துக்கொண்டு வந்துவிட்டேன்."

"என்னடா மடையன் மாதிரி உளறுகிறாய்."

"நான் உளறுகின்றேனா நீ உளறுகின்றாயா? போய்ப் பார் வாசலில் யார் நிற்பதென்று."

மயிர்க்கூச்செறியும் கூக்குரலும் அதனை அடுத்து வாசல் புறம் 'தடால்' என்ற சப்தமும் கேட்டன. நான் ஓடிப் போனேன். கீழே கோபால் மூர்ச்சையாகி விழுந்துகிடந்தான். ★

—"போர்வாள்"

# வெண்ணிலாவை அடைய விஞ்ஞானிகளின் முயற்சி

ஒரு நூற்றூண்டு அளவிற்குள் மனிதன் இயற்கையை எவ்வளவு தூரம் அடக்கி ஆண்டிருக்கின்ருன் என்பதை நினைக்கும்போது உண்மையாகவே வியப்புத் தோன்றும். கடலுக்குக் கீழ் கப்பலைச் செலுத்தவும், நிலத்தின் மீது கார் ஓட்டவும், வானத்தின் வழியே விமானத்தைப் பறக்கச் செய்யவும் முயன்று வெற்றி யடைந்தான்; இன்று, இன்னொரு புதுமை—'இன்று அல்லது நாளை' என்னும் நிலையில் இருக்கிறது. சந்திரனையும், அதற்கும் அப்பால் உள்ள நட்சத்திரங்களையும் மனிதன் சென்று காணக்கூடிய புதிய யுகம் விடியப் போகிறது. பூமியைச் சுற்றிச் 'செயற்கை நிலவு' ஒன்று செய்துவிடப் போவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சந்திரனை எட்டிப் பிடிக்க முடியுமா?—பூமியிலிருந்து சந்திரனுக்கு 2,40,000 மைல். பூமிக்கு மேல் சுற்றிவரும் செயற்கை நிலவு, அதிலிருந்து சந்திரனை நோக்கிச் செல்லும் சாதனத்தை உந்தக்கூடிய வசதியமைந்ததாய் இருக்க வேண்டும். அத்தகைய செயற்கை நிலவைச் செய்துவிட்டால், இயற்கைச் சந்திரனை எட்டிப் பிடித்து விடலாம் என்கின்றனர், ஆராய்ச்சியாளர். எனினும், 'வான வெளிப் பயணத்தால் நம் உடம்பும், மனமும் நொறுங்கிப் போகாமல் பிழைத்திருக்க இயலுமா?'—என்பதைப் பற்றி நாம் இன்று அறிந்திருப்பது போதாது; இன்னும் அறிய வேண்டுவது எவ்வளவோ உண்டு.

சந்திரன் பூமிக்கு அருகில் இருப்பது. இன்னும் அதிகத் தொலைவிலுள்ள கோள்களைப் போய் அடைவது இன்னும் அதிகக் கடினமும், ஆபத்து நிறைந்ததும் ஆகும்; என்றாலும் 'நம்மில் பலருடைய வாழ்நாளிலேயே செவ்வாய் அல்லது வியாழனை மனிதன் எட்டிப்பிடித்து விடுவான்,' என்று விஞ்ஞானிகள்—ஒருவர், இருவர் அல்ல—பலர் கருதுகிறார்கள். கி. பி. 2000-க்கு முன், அது உண்மைச் செய்தியாகிவிடும் என்கின்றனர். விஞ்ஞானக் கட்டுக் கதைகள் மெய்யான நிகழ்ச்சிகளாக மாறுவது நடந்து கொண்டுதான் இருக்கிறது.

மனிதன் செய்யும் செயற்கை நிலவு, விண்ணில் தோன்றும் காலமும் பொருத்தமான காலந்தான். 1957-ன் இடையிலிருந்து 1958 வரை பல நாட்டு விஞ்ஞானிகள் சேர்ந்து, 'சர்வதேச

பூகர்ப்ப ஆண்டு' என்பதொன்று கொண்டாட இருக்கிறார்கள். வானிலை, கடல், பூகர்ப்பம், சூரியனிலிருந்து கிடைக்கும் வெப்பம், வெளிச்சம், ஆகாய மண்டலத்தின் மேற்பகுதி முதலிய பல இயற்கைக் கூறுகளைப் பற்றி அறிந்தவற்றை, அந்த ஆண்டில் சுமார் 40 நாட்டு விஞ்ஞானிகள் கலந்து பேசுவர்.

முதன் முதலில் செய்யப்படும் செயற்கை நிலவு, ஒரு காற்பந்து அளவுதான் இருக்கும். அதனை ராக்கெட் மூலம் வானில் செலுத்தி விட்டு விடுவார்கள் எனத் தெரிகிறது. அதன் பின் அது பூமிக்கு 250 மைல் உயரத்தில் ஏறக்குறைய மணிக்கு 18,000 மைல் வேகத்தில் பூமியைச் சுற்றிச் சுற்றி வரும். சில நாட்கள் இவ்வாறு சுற்றிய பின், அதன் வேகங் குறைந்து, அதுவும் குலைந்து கீழே விழுந்து விடும்.

'இதனால் இன்ன பயன்? இதனால் இன்னின்ன நன்மைகள் உண்டு.'—என, இன்று விவரமாக அறுதியிட்டுச் சொல்ல முடியாது என்பது விஞ்ஞானிகளுக்குத் தெரியும். ஆயினும், ஆளில்லாமல் இயங்கும் இந்தச் செயற்கைக் கோளில் வைத்து அனுப்பிய கருவிகள், உடனுக்குடன் பூமியிலுள்ளவர்களுக்குத் தெரியப்படுத்தும் விஞ்ஞானத் தகவல்கள், இவ்வுலகத்தைப் பற்றி நாம் இன்று வரை அறியாத பல உண்மைகளை விளக்கும்.

உதாரணமாக, காஸ்மிக் கதிர்கள், சூரியனின் பிரகாசம் இவை பற்றிய தகவல்கள் தெரியவரும். வானத்தின் வழியே சூரிய மண்டலத்திலுள்ள பல்வேறு கோளங்களுக்கும் செல்வதற்குத் தக்க வானவெளிக் கப்பல் கட்டவும், அதில் கருவிகள் மட்டும் அன்றி மக்களும் செல்வதற்கு ஏற்பாடு செய்யவும் இத்தகவல்கள் பேருதவியாயிருக்கும்.

செயற்கை நிலா செய்யக்கூடிய உடனடியான நன்மைகள் இன்னும் பல. சூரியனிடமிருந்து கிடைக்கும் சக்தியைப் பற்றி அது தெரிவிக்கும் தகவல், பூமியின் நீண்ட காலத் தட்ப வெப்ப நிலை பற்றி எவ்வளவோ அறிவதற்குத் துணை செய்யும். பனி ஆறுகள் பரவுமா, குறையுமா?—வறண்ட காடுகளில் ஈரப் பசை பெருகுமா, அருகுமா?—இத்தகைய தகவல்கள், உலகமெங்கும் உழவு, வியாபாரம், மக்கள் குடியேற்றம் ஆகியவற்றைப் பாதிப்பவை. 'செயற்கை நிலவு' ஆராய்ச்சியால் இயற்றை அறியலாம்.

சுற்றிவரும் செயற்கை நிலாவைப் பூமியின் சில பகுதிகளிலுள்ளவர்கள், வானிலை சரியாக இருந்தால், ஒன்றரை மணி நேரத்துக்கு ஒரு முறை நேரே கண்ணால் காணலாம்; இதற்குக் காரணம், இயற்கை நிலவைப் போல் அதுவும் சூரிய ஒளியைப் பெற்றுத் திருப்பி வீசுவதேயாகும்.

விஞ்ஞானிகள் 'டெலஸ்கோப்பு' களாலும் மின் அணுக்

கருவிகளாலும் செயற்கை நிலா மீது பார்வை செலுத்துவார்கள்.

பூமியைச் சுற்றியுள்ள வாயு மண்டலத்துக்கும் வெளியே உள்ளவற்றைப் பற்றி இச்செயற்கை நிலா வாயிலாக அறிய அறிய, பெரிய பெரிய செயற்கை நிலாக்களைச் செய்யும் வகையுண்டாகும். பூமிக்கு 1,000 மைல் உயரத்துக்கு மேலே எப்போதும் சுற்றிக் கொண்டுவரும் செயற்கை நிலாஒன்றை இன்னும் 25 ஆண்டுகளில் செய்தாலும் செய்து விடலாம்.

இவ்வாறு விண்ணிலிருந்து விழாதபடி எப்போதும் இருக்கக் கூடிய செயற்கை நிலவுகளை விண்ணில் தொங்க விட்டு விட்டால், அவை வானொலிக்கதிர்களையும், டெலிவிஷன் கதிர்களையும் உலகில் நெடுந் தொலைவு அனுப்புவதற்கு ஏற்ற அஞ்சல் நிலையங்களாக விளங்கும். அவற்றால் சூரிய சக்தியை அதிகமாகப் பயன் படுத்தும் வழியும் கிடைக்கலாம் என்கிறார்கள் விஞ்ஞானிகள். வெய்யிலில் உள்ள சக்தியை, தக்க கருவிகளால் அந்தச் செயற்கை நிலவுகளில் சேமித்து வைத்து, வேண்டும் போது பூமிக்கு அனுப்பக்கூடும். ★

—"நம் நாடு"


"ஆரம்பக் கல்வி ஆபீஸ்"

❋

94–95, புதுத்தெரு, மண்ணடி
சென்னை–1.

❋

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–8

ரிகார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–0

பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–0

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1–0

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–0

Form of Certificate of Income
வருமான நற் சாட்சி பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–0

(தபால் செலவு உட்பட)

❋

ஒவ்வொன்றிலும் 25 பாரங்களுக்குக் குறையாமல் முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

-AUG 1956
MADRAS

# தென்னாட்டு ரப்பர்

தொண்டைமான்

சிங்கப்பூரிலே குண்டு விழுந்தது. பினங்கிலே ஜப்பான் நாட்டு விமானங்கள் வட்டமிட ஆரம்பித்தன. "இங்கிலாந்தின் முதுகெலும்பு" என்று புகழப்பட்ட உலகத்திலேயே பெரிய இரும்புக் கப்பல் ஜப்பான் குண்டு வீச்சால் ஒரு நொடியில் மூழ்கியது. மலேயா ஜப்பானியர் பிடியிலே மாட்டிக்கொண்டது.

மலேயா—நேச நாடுகளின் உயிர், முக்கியமான போர்க்களம். அதன் வீழ்ச்சிக்குப் பிறகு, நேச நாடுகளுக்கு ஒரு முக்கியமான இழப்பு, ஈடு செய்ய முடியாத ஒரு தேவை ஏற்பட்டது. இதை எப்படிச் சரிகட்டுவது என்ற எண்ணம், ஆராய்ச்சி அவர்களின் பெரியதோர் பிரச்சினையாகிவிட்டது.

மலேயா—உலக ரப்பர் உற்பத்தியில் 90 சத வீதத்தை உற்பத்தி செய்யும் நாடு. மோட்டார் கார்கள், ஆகாய விமானங்கள், சைக்கிள்கள் முதலியவற்றிற்கு வேண்டிய டயர்கள் செய்ய ஏராளமான ரப்பரை, அந்த மிக நெருக்கடியான போர்க்காலத்திலே, நேசநாடுகள், மலேயாவிடம் பெற்றுவந்தன. அந்த மலேயா வீழ்ந்துவிட்டது. ரப்பர் கிடைப்பதும் நின்றுவிட்டது!

ரப்பர் இன்றி கார் ஓட்டுவது எப்படி? காரும் விமானமும் இன்றிப் போர் செய்வதெப்படி? எனவே அமெரிக்காவும் பிரிட்டனும் ரப்பர் தரும்படி இந்தியாவை நோக்கின. இந்தியா கல்கத்தாவையும், பம்பாயையும் நோக்கிற்று! பம்பாயும், கல்கத்தாவும் திராவிடத்தை நோக்கின!

திராவிடத்தின் ரப்பர் பம்பாய்க்கும் கல்கத்தாவுக்கும் சென்றது. அங்கே டயராக, பொருள்களாக மாற்றப்பட்டது. போர்க் களங்களுக்கு அனுப்பப்பட்டது. போர்க்களத்திலே குண்டு வீசிக்கொண்டிருந்த விமானங்களின் சக்கரங்களிலும், மோட்டார்களின், டாங்குகளின் சக்கரங்களிலும் திராவிடத்தின் ரப்பர் காட்சியளித்துக் கொண்டிருந்தது!

இரண்டாம் உலகப் பெரும் போரின்போது, நடந்த நிகழ்ச்சிகளில் ஒன்றுதான் இதுவும். ஆஸ்டினிலும், மாரிஸ் மைனரிலும், 'ப்யூக்'கிலும், வாக்சாலிலும் அமர்ந்து, மணிக்கு அறுபது மைல் போட்டிபோட்டுப் போகின்ற "மேதை"கள் பலருக்குக்கூட, தங்கள் காரின் டயர் எங்கே செய்தது, எங்கிருந்து

கிடைத்தது என்பது தெரிந்திருக்காது. உண்மையிலேயே பம்பாயிலும், கல்கத்தாவிலும் செய்யப்படும் அந்த டயர்கள், திராவிடத்தின் ரப்பரினால் செய்யப்படுபவைதான் என்ற உண்மையை அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

திராவிடத்தின் ரப்பரைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமா? நேரே நீலகிரிக்குச் செல்லுங்கள். அங்கே பல ரப்பர்த் தோட்டங்கள் 340 ஏக்கரிலே இருப்பதைக் காணலாம். முழுவதும் காணவேண்டுமா? வளம் கொழிக்கும் மேற்குக் கடற்கரைக்குச் செல்லுங்கள். அரபிக் கடலின் அலைகளால் தாலாட்டப்பட்டு அழகுற விளங்கும் அந்தக் கடற்கரையை ஒட்டி, அதன் அருகே வானமளாவி நிற்கும் மேற்கு மலைத்தொடரின் சரிவுகளின் பக்கத்திலே, தெற்கு வடக்காக சுமார் 400 மைல் தூரம் பிரயாணம் செய்யுங்கள். காடுகளுக்கு மத்தியிலும், குன்றுகளுக்கு இடையிலும், சமவெளிகளின் நடுவிலும், சிற்றாறுகளின் அருகிலும் சிங்காரமான ரப்பர்த் தோட்டங்களை, இடை இடையே ஏராளமாகக் காண்பீர்கள்!

திராவிடத்திற்கு எப்படி வந்தது ரப்பர்? 1876-ம் ஆண்டுக்கு முன்னால் அமெரிக்காவிலிருந்து, அமெரிக்கர் சிலர் அடங்கிய குழு ஒன்று அரபிக்கடலிலே வந்து இறங்கியது. அவர்களில் பலர் நல்ல மாலுமிகள். ஊக்கமும் உற்சாகமும் உடையவர்கள். திராவிடத்தின் மேற்குக் கடற்கரையிலே வந்து அவர்கள் இறங்கினார்கள். நிலப்பகுதியிலே நுழைந்தார்கள். பெரிய காடுகளை, குன்றுகளைக் கண்டார்கள். அந்தக் காடுகளிலே சீறும் சிறுத்தைகளை, பாயும் புலிகளை, பிளிறும் யானைகளைக் கண்டார்கள்!

பயங்கரமான இடங்கள்தான். எனினும் பதறாது ஆராய்ச்சி செய்தார்கள். அவர்களை இங்கே அனுப்பிவைத்தவர் **ஹென்றி விக்கன் (Henrywiken)** என்ற அமெரிக்கர். கூடவே ஒரு பெட்டியையும் அவர்களிடம் கொடுத்தனுப்பியிருந்தார்.

வந்தவர்கள் விலங்குகளோடும், விஷப் பூச்சிகளோடும் போராடிக்கொண்டே காடுகளை அழித்தார்கள். மேடுகளைச் சமப்படுத்தினார்கள். கொண்டு வந்திருந்த பெட்டியைத் திறந்தார்கள். ரப்பர் விதைகளை இங்கெல்லாம் பயிரிட்டார்கள்! விரைவில் பெரிய பெரிய ரப்பர்த் தோட்டங்களை பல இடங்களில் அமைத்து விட்டார்கள். ரப்பர் உற்பத்தி திராவிடத்தில் தொடங்கியது. இந்தியாவின் ஸ்டேட் செயலாளராக இருந்த சாலிஸ்பரி பிரபுவும் இதற்கு ஓரளவு பொறுப்பாளி.

இந்தியாவில் முதன் முதல் ரப்பர் பயிரான இடம் இதுதான். இன்று இந்தியாவுக்கு தேவைப்படும் ரப்பரில் மிகப் பெரும் வதுதியை உற்பத்தி செய்தும் பருநம வளம் மிக்க திருவிடம்தான்!

மரத்தைக் கொத்தினன். பால் வடிந்தது. பாலை உறையச் செய்து, சிறிது கெட்டியாக்கினன். அதை எடுத்துக் காகிதத்தில் தேய்த்தான். எழுத்துக்கள் அழிந்தன. எழுத்தை அழித்த காரணத்தால் "அழிப்பான்" என்று பொருள் படும், 'ரப்பர்' என்ற ஆங்கிலப் பெயரை (Rub-off) அதற்குச் சூட்டினன்.

நூற்று எழுபது ஆண்டுகளுக்கு முன்பு ஜோசப் பிரீஸ்ட்லீ காலத்தில் கூட பென்சில் எழுத்தை அழிக்க மட்டுமே, ரப்பர் உபயோகப்படும் என்று உலகம் கருதிக் கொண்டிருந்தது.

ரப்பர் வரலாற்றிலே ஒரு புது சகாப்தம் 1885-ம் ஆண்டுக்குப் புன்புதான் ஏற்பட்டது. அதற்கு முக்கியக் காரணம் 'டன்லப்' (Dunlop) என்ற ஒரு அயர்லாந்துக்காரன். அயர்லாந்தின் நாட்டுப்புறங்களிலே அவன் சுற்றி வந்தான். இரும்புச் சக்கரம் மாட்டப்பட்ட வண்டிகளை, அவற்றை இழுத்துச் செல்லும் மிருகங்களுக்கு ஏற்படக்கூடிய வேதனைகளை, அந்த வண்டியிலே மணிக்கு இரண்டு மைல் வேகத்திலே செல்லும் பிரயாணிகளுக்கு உண்டாகும் தொல்லைகளைக் கண்டான். அவற்றைக் கண்ட அவனுக்கே வேதனை அதிகரித்தது மிகமிக.

வேதனைக்கும் ஓர் எல்லை காண விரும்பினன்; விரைவிலேயும் கண்டு விட்டான். அவன் கண்டுபிடித்தது ரப்பரால் ஆன காற்றடைந்த டயர்! அந்த டயரின் புதுமையால்தான், அந்த டன்லப்பின் கண்டுபிடிப்பால்தான், விஞ்ஞானத்தை இன்று வெறுத்துப் பேசும் வேதாந்திகள்கூட, மணிக்கு 60 மைல் இன்றைய தினம் செல்ல முடிகிறது!

டயரைக் கண்டுபிடித்த டன்லப் அதைச் செய்தும் காட்டினன். 10 வயது நிரம்பிய தன் அருமை மகனுடைய சைக்கிளை எடுத்து, அதன் கால்களுக்கு, டயரைப் பொருத்தினன். மகனை அதில் ஏற்றினன். சைக்கிள் போட்டி ஒன்றுக்கு அனுப்பி வைத்தான். டயரின் மகத்துவத்தால் மகன் போட்டியிலே வெற்றி பெற்றன்—டன்லப் மனம் மகிழ்ந்தான்.

டன்லப்பால் செய்யப்பட்ட இந்த முதல் டயர் சுமார் 3000 மைல்கள் ஓடியபின் தேய்ந்தது. இந்த டயரை இன்றும் இங்கிலாந்திலே ராயல் எடின்பரோ மியூசியத்தில் காட்சியாக வைக்கப்பட்டிருப்பதைக் காணமுடியும்.

டன்லப்பின் புகழும், அவன் கண்டுபிடித்த டயரின் புகழும் 1899-க் குள் உலகெங்கும் பரவத் தொடங்கிற்று. கூட்டாளி ஒருவரைச் சேர்த்துக்கொண்டு கம்பெனியொன்று துவக்கினன் —ரப்பர் டயர் உற்பத்தி செய்ய! மதிப்பும் தேவையும் அதிகரித்தது. கம்பெனியைப் பெரிதாக்

கிறான். அந்தக் கம்பெனி வளர்ந்து, இன்று உலகில் டயர் உற்பத்தி செய்யும் பெரிய கம்பெனிகளுள் ஒன்றாக, மிகப் பழமையானதாக, சிறந்ததாகத் திகழ்கின்றது, இங்கிலாந்தில்!

இந்த இடைக்காலத்தில் ரப்பரிலிருந்து புதுபுதுப் பொருள்கள் செய்யப்பட்டன. ரப்பரைக் கொண்டு புதிது புதிதாக எத்தனை எத்தனையோ வகைப் பொருள்களைச் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். பென்சில் எழுத்தை அழிக்கும் ரப்பர், டயர் முதல் சுமார் 25,000 (25 ஆயிரம்) விதமான பொருள்கள் இன்று ரப்பரைக்கொண்டு செய்யப்படுகின்றன. இவ்வளவு உபயோகமாகும் வேறு ஒரு பொருள் உலகில் இருப்பது சந்தேகமே!

ரப்பரின் உபயோகம் அதிகரிக்க அதிகரிக்க, அதன் தேவை அதிகரிக்கவே—உற்பத்தியும் அதிகரிக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மலேயா, இந்தோனேசியா, சிலோன், இந்தியா முதலிய நாடுகளில் ரப்பர் ஏராளமாக விளைவிக்கப்பட வேண்டி வந்தது. இதன் காரணம் மேற்கு, ஐரோப்பிய நாடுகள் ரப்பர் உற்பத்திக்கேற்ற வசதிகளைப் பெறாமல் போனதும் ஒன்றாகும்.

இன்றைய தினம் ரப்பர் உற்பத்தியில் உலகிலேயே முதலிடம் வகிப்பது மலேயா. அங்கே ஆண்டுதோறும் 7 லட்சம் டன்கள் விளைகின்றது! ஆங்கிலத் தளபதி டெம்ப்ளர் அண்மையில் மலேயாவில் ஒரு பொதுக்கூட்டத்தில்,

“மலேயாவில் இருக்கும் ரயில்வேத் தொழிலாளரில் 90 சத வீதம் பேர் தமிழர்கள்! அதுபோல் ரப்பர்த்தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளரில் பெரும்பாலோர் தமிழர்களே” என்ற உண்மையை வெளியிட்டார்! அதுமட்டுமல்ல தமிழர் மற்ற எல்லோரையும் விட எந்த வேலை செய்வதிலும் திறமையும், வன்மையும் வாய்ந்தவர்கள் என்று கூறியிருக்கிறார்!

ரப்பர் உற்பத்தியில் மூன்றாம் இடம் வகிக்கும் இலங்கையிலும், ரப்பர் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களில் பெருவாரியான தமிழர்களைக் காணுகிறோம்.

இந்த வகையில் உலக ரப்பர் உற்பத்தியில் தமிழரின்—திராவிடரின் பங்கு மிகமிக உன்னதமானது—கூர்ந்து கவனிக்கத்தக்கது என்று கூற விரும்புகிறோம்!

திராவிடத்திலே உற்பத்தியாகும் ரப்பரின் மொத்த அளவு ஆண்டொன்றுக்கு சுமார் 3,40,000,00 (3 கோடியே 40 லட்சம்) ராத்தல்கள்! இது அகில இந்திய உற்பத்தியில் சுமார் 85 சத வீதம் ஆகும்!

விந்தியத்துக்கு வடக்கே விளைகின்ற ரப்பரைப்பற்றி நமது கண்ணோட்டத்தைச் செலுத்தி

ஞல், அங்கே ஏதோ ஓரிரண்டு இடங்களில் பெயரளவில் விளைந்து கொண்டிருப்பதைத் தான் காண்கிறோம். அப்படி அங்கே விளைவதைக் கணக் கெடுத்துப் பார்த்தாலும், மிக மிகக் குறைந்த அளவில் சுமார் 30 லட்சம் ராத்தலுக்குக்கூடக் குறைவாகவே இருக்கிறது.

இதற்குக் காரணம் என்ன வென்று நிபுணர்களைக் கேட்டால் அவர்களிடமிருந்து, "ரப்பர் விளைய அதிக மழையும், அதிக வெப்பமும் தேவை. அதோடு நல்ல, ரப்பருக்குத் தகுதியான மண்ணும் வேண்டும். மூன்றும் வாய்க்கப் பெற்றுள்ள இடத்தில் ரப்பர் அதிகம் விளைவதில்—விளைவிக்க முடிவதில் வியப்பென்ன?" என்ற பதில் தான் கிடைக்கும்!!

திராவிடத்திலே உற்பத்தியாகும் மூன்றரை கோடி ராத்தல் ரப்பருக்குத் தேவையான தொழிற்சாலைகள், திராவிடத்திலே இல்லாதிருப்பதுதான் ஒரு மாபெரும் குறையாகும். 1935 வரை திராவிடத்தின் ரப்பர் அப்படியே ஏற்றுமதியாகியது. அங்கே டயராகவும், பொருள்களாகவும் மாற்றப்பட்டு அதே ரப்பர் திரும்ப வந்தது!

இதைக்கண்ட அந்தக் காலத்து "உண்மை இந்தியர்" சிலருக்கு வயிறு எரிந்தது! "நம்மிடம் 10 ரூபாய்க்கு வாங்கிச் சென்ற ரப்பரைப் பொருளாக மாற்றி, நம்மிடமே வெள்ளையன் 100 ரூபாய்க்கு விற்கிறனே! வெள்ளையன் சுரண்டுகிறன்! சுரண்டல் ஒழிக!" என்று அந்தத் தேசாபிமானிகள் முழக்கமிட்டார்கள்! "நமக்குப் பெரியதோர் பொருளாதார நஷ்டம் இது" என்று விளக்கி விளக்கிச் சொன்னர்கள்.

1935-ல் டன்லப் கம்பெனியார் கல்கத்தாவில் ஒரு ரப்பர் தொழிற்சாலையைத் திறந்தார்கள்! 1939-ல் பயர்ஸ்டோன் கம்பெனியார் பம்பாயிலே மற்ருெரு தொழிற்சாலையைத் திறந்தார்கள்! என்ன காரணத்தால், எந்தச் சூழ்நிலையால் பம்பாயிலும் கல்கத்தாவிலும் அந்தக் கம்பெனிகள் அமைக்கப்பட்டன என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை! எனினும் இந்தக் கம்பெனிகள் மிகப் பெரிய அளவிலே பெருக்கப்பட்டன. திராவிடத்தின் ரப்பர் முழுவதையும் இதே கம்பெனிகள் ஆண்டுதோறும் வாங்கிக் கொள்கின்றன. நமது ரப்பரையும், சிறிதளவு வெளி ரப்பர்களையும் கொண்டு, இந்தியாவுக்குத் தேவையான டயர்கள் முழுவதையும் இந்த இரு முக்கிய கம்பெனிகளுமே ஆக்கி அளிக்கின்றன!

1935 வரை திராவிட ரப்பர் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டது. அங்கே பொருளாக்கப்பட்டு திரும்பியது. அதற்குப் பெயர் "இங்கிலாந்தின் சுரண்டல்" என்று கூறுத தேசபக்தர்

களே இல்லை! 1935க்குப் பின் 1953லும் கூட திராவிட ரப்பர் வடக்கே பம்பாய்க்கும், கல்கத்தாவுக்கும் செல்கிறது! அங்கே பொருளாக்கப்பட்டு திரும்ப வருகிறது இங்கே, முன் போலவே! இதற்குப் பெயர் என்ன? எந்த நாட்டுச் சுரண்டல் என்று சொல்லப்பட வேண்டும்?

ஓரே ஒரு ரப்பர் தொழிற்சாலை, திராவிடத்திற்குச் சொந்தமாகத் திருவாங்கூரிலே இருக்கிறது. 1935, லே திருவாங்கூர் சர்க்காரால் துவக்கப்பட்டது. 1949ல் இதைச் சென்னை சர்க்கார் வாங்கிக்கொண்டார்கள். இத் தொழிற்சாலைக்கு மூலதனம் 5,45,000 ரூபாய்! சைக்கிள் டயர்கள், தரை விரிப்புகள், ரப்பர்க் குழாய்கள், பென்சில் ரப்பர்கள், கையுறைகள், பொம்மைகள் முதலியன இங்கே செய்யப்படுகிறது. இந்த மூன்றாண்டு காலத்தில் சர்க்காருக்கு இதில் கிடைத்த லாபம் மட்டும் 2,32,300 ரூ.!

மிகச் சிறிய கம்பெனி இது, என்றாலும் மிகப் பெரிய லாபம் கிடைத்திருக்கிறது. திராவிட ரப்பர் முழுதும் திராவிடத்திலேயே பொருள்களாக்கப்பட்டால், பெரிய தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டால், குறைந்தது 60 கோடி ரூபாயாவது திராவிடம் மேலும் லாபமடையலாம்!

இந்திய ரப்பர் போர்டு என்ற ஒரு கழகத்தை, ரப்பர் உற்பத்தியாளர் பலர் கூடிப் பல காலமாக நடத்தி வருகிறார்கள். அரசாங்கத்திற்கும், இக்கழகத்திற்கும் எவ்விதச் சம்பந்தமும் இல்லை.

மேற்குக் கடற்கரையோரத்திலே, வில்லிங்டன் தீவிலே, இந்திய ரப்பர் போர்டு அடிக்கடி கூடுகிறது. ரப்பர் உற்பத்தி உயர நல்ல யோசனைகளை, வேண்டுகோள்களை அது டில்லிக்கு அனுப்பிக்கொண்டே இருக்கிறது. ஆனால் அரசாங்கம் தங்களைப் புறக்கணிப்பதாக அதன் தலைவர் கூறுகிறார். ரப்பர் உற்பத்தி, ஏற்றுமதி, இறக்குமதி முதலிய எல்லாக் கொள்கைகளையும் தனக்கே உரிமையாக்கிக் கொள்ளும் எண்ணத்துடன் டில்லி பாராளுமன்றத்தில் இப்போது மசோதா ஒன்று வந்துகொண்டிருக்கிறது. இதைத்தான் "தென்னாட்டுக்கே உரிய காப்பி, ரப்பர் இவற்றில் ஒரு சிலரின் சர்வாதிகாரம்" என்று அண்மையில், "பிளாண்டர்ஸ் கிரானிக்கில்" வர்ணித்துள்ளது.

திராவிடத்தின் செல்வம் ரப்பர். இந்தச் செல்வம் வளர வேண்டுமானால், இதுபற்றிய பல விவரங்களை அறிந்து ஆவன செய்யவேண்டும் 'நாம்'!

வளம் கொழிக்கும் திராவிடம் வாவென்று அழைக்கிறது, திராவிடரை! திராவிடத்தின் செல்வர்கள் பலநூறு ரப்பர்த் தோட்

(அடுத்த பக்கம் பார்க்க)

# பற்பல நாட்டு ஓவியக் கலைஞர்கள்

[தி. நா. அறிவு ஒளி]

## 1. ஒகுசாய்—ஜப்பான் நாட்டு ஓவியக் கலைஞர்

**ஓகுசாய்!**

இவ்வியப்பான பெயருடையவர் ஜப்பான் (Japan) நாட்டு ஓவியக் கலைஞர். இவர் பெயரைப் போலவே, இவரும் வியப்பானவர். நிப்பான் அல்லது பப்பான் என்றால், "எழு ஞாயிற்றுக்குரிய நாடு" எனப் பொருள். ஜப்பான் இயற்கை எழிலுக்கும், எரிமலைக் கொடுமைக்கும் புகழ் பெற்ற நாடு. ஒகுசாய் 1760ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 5-ம் நாள் டோக்கியோவில் [டோக்கியோ ஜப்பான் நாட்டுத் தலைநகர். அக்காலத்தில் இதற்கு 'யெடோ' என்று பெயர் வழங்கியது.] பிறந்தார். ஒகுசாயிக்குப் பெற்றோர் சூட்டிய பெயர் டோகிடாரோ. ஆயின், இவர் பிற்காலத்தில் 'ஒகுசாய்' எனத் தனக்குப் பெயர் சூட்டிக் கொண்டார். ஜப்பானில் ஒருவர் பல பெயர்களைச் சூட்டிக் கொள்ளலாம்! இவருடன் பிறந்த ஆடவர் இருவராவர்.

ஒகுசாய் நான்கு வயதுச் சிறுவராக இருந்தபோது அவரை ஒரு கண்ணாடிக்காரர் தத்துப் பிள்ளையாக எடுத்து வளர்க்கலானார். வயது ஏறியதும் ஒகுசாயை அவர் ஒரு புத்தக வணிகரிடம் வேலைக்கு அமைத்தார். ஒகுசாயிக்குப் புத்தக விற்பனையை விட, அப் புத்தகங்களிலுள்ள ஓவியங்களைப் பார்த்துச் சுவைப்பதில் ஆர்வமும், நேரமும் மிகுதியாகச் செலவாயின. அந்தச் சிறுவயதிலேயே இவர் ஓவியம் வரையத் துவங்கிவிட்டார். 'கலைப்பித்து' பிடித்த இப் பையனை மிக விரைவில் புத்தகக் கடைக்காரர் வேலையினின்றும் தள்ளிவிட்டார். அக்காலத்தில் அச்செழுத்துக்கள் மரத்தில் செதுக்கப்பட்டுச் செய்யப்பட்டன. அவ்வாறு அச்செழுத்து செய்தவர் ஒருவரிடம்

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

டங்களைத் திறக்கவேண்டும்; வணிக மன்னர்கள், ரப்பர்த் தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும். அமைத்தால் ஆண்டுக்கு 300 கோடி ரூபாயை அள்ளித்தர திராவிடத்தின் ரப்பர்த் தோட்டங்கள், நமது 'பால் வழியும்' செல்வங்கள் காத்துக் கிடக்கின்றன! அதை வளர்ப்போம்.

★

—"தீப்பொறி"

சில காலம் வேலை பார்த்தார் ஒகு சாய். அத்துறையில் சிறிது பயிற்சியும் பெற்றார். ஆயினும் ஒகுசாய்க்கு அவ்வேலையும் ஒத்து வரவில்லை.

ஓவியக் கலையில் பெயர் பெற்றவனாக விளங்க வேண்டுமென்ற பேரார்வமுடைய ஒகுசாய், அக்கலைக்கெனத் தன் காலத்தைச் செலவிடலானார். கட்சூ காவா ழ்சூன் ழ்சூ என்ற ஓவியரிடம் சிலகாலம் மாணவராக இருந்தார். இயற்கையிலேயே கலையார்வமுள்ள ஒகுசாய்க்குப் பழைய ஓவியபாணிகள் பிடிக்காததால், தாமாகவே புதிய முறைகளை ஓவியம் வரைவதில் கையாளலானார். ஆனால், ஒகுசாயின் ஆசிரியர் பழைய பாணியையே கடைப்பிடிக்க வேண்டுமென வலியுறுத்தினார். உரிமை விரும்பும் கலைஞர் ஒகுசாய் தன் கொள்கையைக் கைவிட விழைவின்றி, ஆசிரியரிடம் விடை பெற்றுக் கொண்டு வெளியேறினார். தன் ஆசிரியனை விட்டுப் பிரிவது ஒகுசாயிக்கும் வருத்தமாக இருந்தது. ஒகுசாயின் நண்பர்களும் இச் செயலை வெறுத்தனர். ஆயின், புதுமையையே போற்றி விரும்பும் மக்கட் பண்பு, ஒகுசாயியின் உள்ளத்தையும் ஈர்த்தது.

மக்கள் ஒகுசாயின் ஓவியங்களை விரும்பினர்; பாராட்டினர்; வரவேற்றனர். இதனால் ஒகுசாய், பழங்கால ஓவிய முறையைப் பின்பற்றும் ஓவியர்களின் பொறாமைக்கு ஆளானார். ஒகுசாய் வரைந்த ஓவியங்களை அப் பொறாமைக்காரர்கள் நடுத்தெருவில் கிழித்தெறிந்தனர். ஆயினும், இவர் புகழ் வளர்ந்து கொண்டே இருந்தது.

ஒகுசாய் அறுபதாம் அகவை எய்தியபோது நிப்பானிலேயே அவருக்கிணையான ஓவியர் இல்லை என்ற அளவிற்குப் புகழ் பெற்றார். புத்தகங்களில் இவரின் ஓவியங்களை வெளியிடப் பதிப்பகத்தினர் போட்டியிட்டனர்.

ஒகுசாய் சிறுசிறு படங்களையே வரைவார். ஆயினும், மிகுந்த கருத்தோடும், நுண்ணிய கைத்திறனோடும் பொறுமையாகப் படங்களை உருவாக்குவார். பொறாமைக்காரர்கள், "ஒகுசாயிக்குச் சிறிய படங்கள் மட்டுமே வரையத் தெரியும்; பெரிய படம் எழுத வராது. எழுதினாலும் குற்றங் குறைகள் மிகுதியாயிருக்கும்" எனப் பழி தூற்றினர். ஒகுசாயிக்கு எரிச்சல் தாளவில்லை ஆகவே, தன் கலைத்திறமையை வெளிக்காட்ட விழைந்தார். 'நாகோயா' கோயிலுக் கருகில் வந்து பார்க்கவும் என ஒரு நாள் குறிப்பிட்டு, எல்லோருக்கும் விளம்பரம் செய்தார்.

குறிப்பிட்ட நாளன்று நாகோயா கோயிலில் அளவற்ற மக்கள் வந்து குழுமினர். கோயிலின் முற்றத்தில் ஒகுசாயின் பணியாட்கள் வேலி அமைத்தனர். வைக்கோலைப் பரப்பி, பெரிய சட்டத்தைக் கட்டி,

உறுதியான, மிகப் பெரிய அளவுள்ள வெண்தாள்களை இணைத்து, 240 சதுர கஜம் அளவுள்ள திரையை ஒட்டி வைக்கோலின் மீது பரப்பிவிட்டுப் போயினர். அன்று பிற்பகல் இன்னும் பெரும்பான்மையான மக்கள் ஒரே கூட்டமாக வந்து கூடினர்.

குறித்த நேரத்தில் தன் மாணவர் குழாத்தோடு ஒகுசாய் வந்தார். ஒவ்வொரு மாணவரும் கையில் நிறக் கிண்ணமும் விளக்குமாறும் வைத்திருந்தார். ஒகுசாய் வெண்தாளின் மேற்பகுதியில் விளக்குமாற்றை நிறத்தில் தோய்த்துக் கொண்டு ஏதேதோ கிறுக்கினார். பிறகு, மாணவர்களை நோக்கி ஓவியத்தை நூலில் பொருத்தித் தூக்கி நிறுத்துமாறு கட்டளையிட்டார். ஓவியம் மரச் சட்டத்தின் மேல் பாகத்தைப் பொருந்தி நின்றது. கூடியிருந்த மக்கள் அனைவரும் ஆரவாரம் செய்து மகிழ்ச்சி தெரிவித்தனர். "தாருசா" என்ற முனிவர் ஒருவரின் ஓவியத்தை வரைந்திருந்தார் அப் பேரோவியர். மிகப் பெரிய உருவமாக இருந்தும், உருவ அமைப்பும், நிறமும் நன்றாக இருந்தன. ஒகுசாய் தான் வரைந்த ஓவியத்தை மீண்டும் பார்க்காமலே மாணவர் புடைசூழத் திரும்பிப்போய் விட்டார். இவர் புகழ் எங்கும் பரவியது. பிறகு, சில நாட்களில் அரிசி மணி ஒன்றில் இரு கரிக் குருவிகள் பறக்கும் காட்சியை மிக நுணுக்கமாக வரைந்து காட்டினார். இவ்வளவு சிறிய ஓவியத்தையும், ஜப்பானில் இவரைத் தவிர வேறு எவரும் எழுதியதில்லை என்பர்! ஒகுசாய் எழுபத்தைந்தாம் அகவையில் பியூசி எரிமலையை நூறு கோணங்களினின்றும் படம் வரைந்து ஒரு புத்தகமாக வெளியிட்டார். அப் புத்தகத்தின் முன்னுரையில் ஒகுசாய் எழுதியது குறிப்பிடத்தகுந்தது." எனக்கு ஆறு வயது ஆகுமுன்பே ஓவியம் வரைவதில் பித்து மிகுதி. ஐம்பதாம் வயதில் நிறைய ஓவியங்களை வெளியிட்டேன். ஆயினும், அவை எழுபதாம் வயதில் எழுதிய ஓவியங்களுக்கு ஈடாகாது. விலங்கு, நிலத்திணை, பறவை, மீன், பூச்சிகள் ஆகியவற்றின் அமைப்புகளைப் பற்றி எழுபத்தி மூன்றும் அகவையில் தான் ஓரளவு தெரிந்து கொண்டேன். எனக்கு எண்பதாம் வயது முடியும் போது பல பொருள்களில் பொதிந்துள்ள மறைவுண்மைகள் முழுமையையும் அறிந்து, ஓவியம் புனைவேன். நூறும் வயதில் எத்தனையோ புதுமைகளை இயற்றுவேன். நூற்றிப் பத்தாம் வயதில் நான் எழுதும் படம் சிறு புள்ளியாயினும், சிறு கோடாயினும் அஃது உயிர் பெற்று உலாவும். நான் கூறியதை செய்கிறேனா இல்லையா என்க் காத்திருந்து காணுங்கள்!"—ஒகுசாய் கூறியபடி யாரும் காத்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை. ஏனெனில், ஒகு

சாய் தன் தொண்ணூறாம் வயதில் இறந்து விட்டார்!!

இவர் தன் முன்னுரையின் அடியில், "முன்னே 'ஓகுசாய்' என்ற பெயருடன் வாழ்ந்த—தற்பொழுது—குவா கியோ சினாக இருக்கும் ஓவியப் பித்தமுள்ள கிழவன் தன் எழுபத்தைந்தாம் அகவையில் எழுதியது." என எழுதியுள்ளார். ஓகுசாய் கூறிய வாறு அவருடைய எண்பதாம் அகவையில் வரைந்த ஓவியங்கள் நன்றாகவே இருந்தன. இவரின் கலைப் பித்து வியக்கத்தக்கது. அதற்கு ஒரு சான்று: ஆசா குவாவில் இருக்கும் ஒரு கோயிலின் பூஞ்சோலையில் ஓகுசாயின் கல்லறை இருக்கிறது. அக்கல்லறையில் "ஓவியப் பித்துப் பிடித்த கிழவன்" எனப் பொறித்திருப்பதை இன்றும் காணலாம். செத்தும் ஓவியப் பித்தனாக வாழும் ஓகுசாய், கலை உலகில் ஜப்பானின் பழுத்த மலர்!

## ஏர்ல் பெய்லி—ஓவியமும் வாய்ப் பழக்கம்!

கையினால் தான் அழகை இயற்றமுடியும் என்பது உலகப் பொது நம்பிக்கை. கையினால் ஆக்க முடியாத அழகுகள் இயற்கைப் படைப்புகள். இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆற்றலும் ஆண்மையும் வாய்ந்தது. ஓவியம்கையினால் இயற்றப்படுவது. ஆகவே தான், "ஓவியமும் கைப் பழக்கம்" என்பர். ஆனால், "ஓவியமும் வாய்ப் பழக்கம்" என் ஓர் ஓவியர்—ஏர்ல் பெய்லி—தன் வாழ்க்கையினால் விளக்குகிறார்! கனடா தந்த கலைஞர் ஏர்ல் பெய்லி. அவர் ஒரு முடவர்! கையும் காலும் அவருக்கு இயங்கா. ஓவியத் தூரிகையை வாயினால்—பல்லினிடையில் வைத்துக் கடித்துக் கொண்டு—ஓவியம் புனைவது அவர் பழக்கம்.

பெய்லி இரண்டு ஆண்டுச் சிறுவராக இருக்கும் போதே இளம்பிள்ளை வாதம் என்ற கொடிய நோய்க்கு ஆளானார். அதன் விளைவாக அவருக்குக் கழுத்துக்குக் கீழே உள்ள உடற்பகுதி உணர்வற்று இயங்க வியலாது போய்விட்டது. பெய்லியின் தந்தையார் ஒரு கொல்லர். பெய்லி ஆறாண்டுச் சிறுவராக இருந்தபோது, அவருக்கு அவர் தந்தை, ஒரு எழுது கோலை (Pencil) வாயில் கடித்துக் கொண்டு எழுதக் கற்றுக் கொடுத்தார். இப்பயிற்சி வளர வளர பெய்லி ஓவியம் புனையவும் பயின்றார். பெய்லியின் தம்பி, தூரிகையை அவர் வாயில் இடுக்குவது முதலாக, நிறக்கலவை செய்து; தூரிகையை தொட்டு உதவுவதுவரை எல்லா உதவிகளும்செய்வான். பெய்லிக்குஇருபத்தைந்து அகவையானதும், ஓர் ஓவியக் கண் காட்சி நடத்தினார். அது இவர் ஆற்றலையும் புகழையும் உலகிற்கு எடுத்துக்காட்டியது. கானடாவின் எல்லாப் பொருட்காட்சி நிலையங்களிலும் இவர் ஓவியங்கள் காட்சிக்குக் காட்டப்பட்டுள்ளன.

மக்கட் பிறவி உழைத்து வாழ்வதற்கென்றே அமைந்தது. அவ்வுண்மை ஐயம் திரிபற உணர்ந்தோரே கலைஞராகவும், சான்றோராகவும், புலவராகவும், தொண்டராகவும் விளங்குகின்றனர். வாழ்க்கையில் உடலால் விளையும் பல இன்பங்களை—ஆற்றல்களை—இழந்து விட்ட பெய்லி தன் வாயைக் கொண்டு கலைப்பணியாற்றிய அறிவை என்னென்பது! "வாயுள்ள பிள்ளை பிழைக்கும்!" என்ற பழமொழியை எண்ணி அதற்கிலக்கியமான ஏர்ல் பெய்லியின் வாழ்வையும் எண்ணினால் மகிழ்ச்சியும் பெருமையும் நம் உள்ளத்தில் அலைமோதாமல் இருக்க முடியுமா ?

## ஏன்சுவான் மீகரன்—டச்சு ஓவியர்

ஏன்சுவான் மீகரன், டச்சு நாட்டு ஓவியர். ஒருநாள் அவர் வீட்டை அரசியற் காவலர்கள் ஆராய்ந்தனர். அவ்வோவியர் ஓவியம் புனையும்போது நேரிலும் பார்த்தனர். பிறகு அவரைச் சிறை செய்தனர். ஏனெனில், வர்மீர்சு என்ற பழம் பெரும் ஓவியக் கலைஞரின் படங்களுக்கு அந்நாட்டில் மதிப்பும் புகழும் மிகுதி. அவ்வோவியங்கள் கிட்டற்கரியன. அக்கலைஞரின் படங்களைப் பொருட் காட்சி நிலையங்களில் வைக்க காட்சி நிலையங்கள் விரும்பித் தேடின. வான் மீகரனின் படங்கள் வர்மீர்சுவின் படங்கள் போலவே இருக்கும். ஆகையால் வான்மீகரன் தன் ஓவியங்களை வர்மீர்சுவின் படங்கள் எனக் கூறிப் பல பொருட்காட்சி நிலையங்களுக்கு விற்றுச் செல்வரானார். இவ்வுண்மை யறிந்த அரசியலார் 'ஊழல்' செய்த குற்றத்திற்காக வான்மீகரனைச் சிறை செய்தனர்! கலை, நிலையான இன்பம் பயப்பதுதானென்றாலும், அது அறமும் உண்மையும் அற்றதானால் தீமை விளைக்குமென்பதற்கு இதுவும் ஒரு சான்றன்றோ?

## பிக்காசோ—ஸ்பெயின் நாட்டு கலைஞர்

ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த பிக்காசோ உலகறிந்த ஓவியர். இவர் ஒரு பொதுவுடைமைக் கொள்கைக்காரர். இவர் ஓவியங்களில் பெரும் பான்மையானவை இயற்கைத் தன்மை வாய்ந்தவை அல்ல. அவைகள் நகைச்சுவை ஓவியங்கள் போலவும் தோற்றமளிக்கும்.

இரண்டாம் உலகப் போரின் தொடக்கத்தில் ஒரு மாது ஸ்பெயினின் எல்லையிலிருந்து பிரெஞ்சு எல்லைக்குள் புகுந்தாள். இவளோர் பிக்காசோவின் முன்னாள் மனைவி; மண விலக்கு செய்து கொண்டவள். அப்போது சுங்க நிலையங்கள் ஒவ்வொருவரையும் ஆராய்ந்து பார்த்தே நாடுவிட்டு வெளியேற உரிமைதரும். அப்பெண்ணையும் முறைப்படி ஒரு சுங்கத்தலைவர் ஆராய்ந்தார். அவளிடமிருந்த ஒரு கித்தான் துண்டைப் பார்த்து; "அது என்ன?" எனக் கேட்டார். அவள், "இது என்

னுடைய படம். என் முன்னாள் கணவர் பிக்காசோ வரைந்தது'' என்றாள். படத்தைப் பார்த்த சுங்கத் தலைவர், "இல்லை. இது ஓவியமே இல்லை. ஏதோ ஒரு கருவியின் அமைப்புப் (Plan) படம்'' என்றார். உண்மையில் அது பிக்காசோவின் ஓவியமே தான்! அவள் எவ்வளவோ எடுத்துரைத்தும் அவர் நம்பவே இல்லை. பிறகு ஒரு பொறியியல் கலைஞரை வரவழைத்து, அப் படத்தைக் காட்டி, "இது ஒரு கருவியின் அமைப்புப் படமா?'' என ஆராயச் செய்தனர். அப் பொறியியலார் நீண்ட நேரம் அப்படத்தை நன்கு ஆராய்ந்தார். அளவு கோல் கொண்டு பல வகை அளவுகளெல்லாம் அளந்து, கணக்குகளெல்லாம் போட்டுப் பார்த்தார். கடைசியாக, "நண்பரே, இது ஒரு கருவிதான் போலத் தோன்றுகிறது. ஆனால், இக் கருவி வேலை செய்யாது'' எனத் திட்டவட்டமாகக் கூறினர். பிறகுதான் அப்பெண் அந்த எல்லையைக் கடக்க முடிந்தது!

பிக்காசோவின் ஓவியத் தன்மையை இதைவிடச் சிறப்பாக எந்த நிகழ்ச்சியால் விளக்க முடியும்?

---

# சிந்தனைக்கு விருந்து

[தொகுப்பாளர்: துரை. முருகேசன், ஆரம்ப ஆசிரியர், காரமடை.]

1. கையில் புண் இல்லையானால் அதில் நஞ்சினை எடுக்கலாம்; புண் இல்லாத கையை நஞ்சு தாக்காது. அதுபோலவே தீய காரியத்தைச் செய்யாத வரையில் பாவம் உன்னை ஒன்றும் செய்யாது.

—"புத்தர்"

2. எவனொருவன் துரத்துப் பச்சையால் இழுக்கப்பட்டு, உலகம் முழுமையும் ஓடித் திரிந்து தொண்டுபுரிய அலைகிறானோ, அவன் தன் காலத்தையும், சக்தியையும் விழலுக்கிறைத்தவனாவான்.

—"காந்தியடிகள்"

3. உன்னைப் பற்றி மதிப்பிடும் போது மற்றவர்களையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். மற்றவர்களைப்பற்றி மதிப்பிடும் போது உன்னையும் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

—"டெனிக்லான்"

# சர்வதேசத் தபால் போக்கு வரத்து

இரண்டு தலை முறைகளுக்கு முன் இந்தியாவில் போடும் கடிதம் வேறொரு நாடு போய்ச் சேருவதற்கு 1,200 வகையான தபால் கட்டண விகிதங்களுக்கு உட்பட வேண்டியதாயிருந்தது.

தபால் கட்டணத்தின் மூலமாய்ப் பண வருவாய் பெறலாம் என்பதை அறிந்து பல நாடுகள் அந்தக் காலத்தில் தபால் கட்டணங்களை மிக அதிகமாக உயர்த்தின.

தபால் கட்டணம் மிக அதிகமாக இருந்தது மட்டுமல்ல. அது ஒரே நிலையில் இருக்கவும் இல்லை. உதாரணமாக, இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்கு ஒரு கடிதம் போவதற்கு 4 அணு அல்லது 6, 10, 14, 20, 32, 40, 50, 60 அணு கொடுக்கவேண்டியதாயிற்று. கப்பல் கிடைப்பதையும், அது செல்லும் வழியையும் சார்ந்திருந்தது கட்டண விகிதம். கடிதம் அனுப்புவோருக்கு நல்லெண்ணம் ஏற்பட வேண்டுமென்பது முக்கியமானதாக இருக்கவில்லை.

பல நாடுகளின் வழியே செல்லும் கடிதத்திற்கு இன்ன கட்டணம், கட்டவேண்டுமென்பதைத் தபால் போக்குவரத்து நிபுணராலும் அந்தக் காலத்தில் உடனே சொல்லிவிட முடியாது.

எல்லைப்புறத்திலுள்ள இடங்களில் கடிதங்கள் நாள் கணக்காகக் கிடப்பதும் உண்டு. கடிதங்களில் கட்டண விகிதங்களைக் குறிக்க வேண்டியதிருந்ததால் அத்தகைய தாமதம் ஏற்படும்.

இதுவுமன்றி, ஒவ்வொரு நாடும் தன் நாட்டுக் கட்டண விகிதத்தையே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லியதால் நாடுகளுக்குள் போட்டி ஏற்பட்டதுமுண்டு. இவ்வித தேசியத்தால் வேற்றுமையும் குழப்பமும் விளைந்துவந்தன.

ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க நாட்டு ஜனாதிபதியாய் இருந்த காலத்தில் போஸ்ட் மாஸ்டர் ஜெனரலாய் இருந்த மாண்ட்கோமரி பிளேர் என்பவர் சர்வதேசத் தபால் முறையை ஒழுங்குபடுத்த முதன்முதல் ஓர் ஏற்பாடு செய்தார். 1862, ஆகஸ்டு 4-ம் தேதி அவரும் அப்பொழுது அமெரிக்காவின் வெளி நாட்டுச் செயலாளராயிருந்த ஸ்டீவர்டும் கையொப்பம் வைத்த கடிதம் ஒன்று பல நாடுகளுக்கு அனுப்பப்பெற்றது. சர்வதேசத் தபால் சிக்கல்களைத் தீர்ப்பது பற்றிப் பேசுவதற்குப் பிரதிநிதிகளை அனுப்பி வைக்க வேண்டுமென்னும் அழைப்பே அக் கடிதம்.

1863, மே 11-ம் தேதி பதினைந்து நாட்டுப் பிரதிநிதிகள் பாரிஸில் கூடினார்கள். அந்தக் கூட்டத்தாலும், பிரஷியத் தபால் துறைத் தலைவர் டாக்டர் ஹென்றிக் வான் ஸ்டீபன் கூட்டுவித்த மாநாட்டாலும் "யூனிவர்ஸல் போஸ்டல் யூனியன்" எனப்படும் அனைத்துலக அஞ்சல் மன்றம் ஏற்படலாயிற்று. 1875, ஜுலை 1-ம் தேதி அது செயலாற்றத் தொடங்கியது.

பாரிஸில் கூடிய முதல் கூட்டத்துக்கு எல்லா ஐரோப்பிய நாடுகளும், எகிப்தும், அமெரிக்காவும் பிரதிநிதிகளை அனுப்பியிருந்தன.

யூனிவர்ஸல் போஸ்டல் யூனியன் வளர்ச்சியடைந்து சர்வதேசத் தபால் போக்குவரத்தை ஒழுங்காய் நடைபெறச் செய்துவிட்டது. பல்வகைப்பட்ட தபால் கட்டண விகிதங்களும்,

ஸ்விட்ஸர்லாந்திலுள்ள பர்ன் என்னும் நகரத்தில் அதன் தலைமை நிலையம் உள்ளது. உலக முழுவதுமுள்ள 200 கோடி மக்களுக்கு அந்த யூனிவர்ஸல் போஸ்டல் யூனியனின் விதிகளால் நலன் விளைகிறது.

உலகத்திலுள்ள மிகப் பழைய சர்வதேச சங்கம் இந்த யூனிவர்ஸல் போஸ்டல் யூனியன்தான். அது தோன்றி எண்பதாண்டுகள் ஆகின்றன. 94 நாடுகளும் அவற்றிற்குட்பட்ட பிரதேசங்களும் அதன் உறுப்புகளாக இருக்கின்றன. 200 தபால் நிர்வாக நிறுவனங்கள் அந்த நாடுகளைச் சேர்ந்தவை. ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பான அமைப்புகளுள் யூனிவர்ஸல் போஸ்டல் யூனியனே மிகப் பெரியதாகும்.

ஒரே நாளில், ஒரே கூட்டத்தில் பல்வேறு நாடுகளுக்குள் இந்த ஒன்றுபட்ட ஒழுங்குணர்ச்சி ஏற்பட்டுவிடவில்லை

விமானத்தின் வழியாகவாவது கப்பல் மூலமாகவாவது ரயில் மூலமாகவாவது நாம் எழுதும் கடிதம் பல நாடுகளைக் கடந்து, அவற்றின் ஆட்சி முறை எந்த வகையைச் சேர்ந்ததாயினும், அவற்றின் வழியாய்ப் பிரயாணஞ் செய்து, சேரவேண்டிய இடம் போய்ச் சேர்கிறது. யூனிவர்ஸல் போஸ்டல் யூனியனின் திறமைக்கு அது ஒரு சான்று.

தபாற் கட்டணம் குறைந்துள்ளது' ராஜதந்திரக் கடிதப் போக்கு வரத்துக்குக் கட்டணம் இல்லை; சர்வதேச விமானத் தபால் பற்றிய ஒப்பந்தங்கள் ஏற்பட்டுள்ளன. உலகத்தின் மிகப் பல நாடுகளிலுள்ள மக்களுக்கு இந்த சர்வதேச ஸ்தாபனத்தால் இவை போன்ற பல நலன்கள் விளைந்துள்ளன.

இந்தப் போஸ்டல் யூனியன் இருப்பதால், யுத்த காலத்திலும், யுத்தக் கைதிகளும், மற்றக் கைதிகளும் தங்கள் உறவினருக்குக் கடிதம் எழுத இயல்கிறது.

இருந்த இடத்தில் இருந்து கொண்டு உலகத்தைப் பற்றி அறிய முடியாதிருக்கும் அந்தகருக்கும் இந்த ஸ்தாபனம் உதவுகிறது.

1952-ல் பிரஸல்ஸில் நடைபெற்ற கூட்டத்தில் மிகவும் பாரமான பிரெய்ல் புத்தகங்களைத் தபால் கட்டணமில்லாமல் அனுப்பி வைக்க இந்த ஸ்தாபனம் தீர்மானித்தது. (கண் தெரியாதவர்கள் படிக்கக்கூடிய புத்தகங்களே பிரெய்ல் புத்தகங்கள்). அவ்வாறே நோயைத் தடுக்கும் மருந்துகளையும் மற்றும் மிகவும் அவசியமான மருந்துகளையும் மற்றப் பொருட்களுக்கு முன்னால் அனுப்பவும் இந்த யூனியன் முயற்சி செய்கிறது. ★

6 AUG 1956 MADRAS

# சம்பளச் சலுகை நஷ்ட ஈடு

## அரசாங்கத்தின் உத்தரவு

ஆரம்பக் கல்வி—உதவிபெறும் பள்ளிகள் — வசூலிக்கப்பட வேண்டிய கட்டண விகிதங்கள் (Fees) நிர்ணயிக்கப்படுதல்—நஷ்ட ஈடு அளிக்கப்படுவது—உத்தரவு பிறப்பிக்கப்படுதல்.

ஜி. ஓ. எண் 1546 (கல்வி) தேதி 14–9–55.

### உத்தரவு

1. முறையே சென்னை நகரத்திலும், முனிசிபல் பகுதிகளிலும், முனிசிபல் அல்லாத ஏனைய பகுதிகளிலும் உள்ள ஆரம்பப் பள்ளிகளில் கீழே தரப்பட்டுள்ள விகிதங்களுக்கு மேற்படாத வகையில்தான் கட்டணங்கள் வசூலிக்கப்பட வேண்டுமென்றும், இந்த விகிதங்களின்படிதான் பள்ளிக்கூட நிர்வாகிகளுக்கு நஷ்ட ஈடு தரப்படுமென்றும், ஒவ்வோராண்டிலும் 11 மாதங்களுக்கு மட்டும்தான் கட்டணங்கள் வசூலிக்கப்படலாமென்றும், இதன்மூலம், சென்னை அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்கிறது.

### கட்டண விகிதங்கள்

| வகுப்பு | முனிசிபல் அல்லாத பகுதிகள் | | | முனிசிபல் பகுதிகள் | | | சென்னை நகரம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| முதல் வகுப்பு | 0 | 2 | 0 | 0 | 3 | 0 | 0 | 4 | 0 |
| 2–ம் ,, | 0 | 3 | 0 | 0 | 4 | 0 | 0 | 6 | 0 |
| 3–ம் ,, | 0 | 4 | 0 | 0 | 5 | 0 | 0 | 8 | 0 |
| 4–ம் ,, | 0 | 5 | 0 | 0 | 6 | 0 | 0 | 10 | 0 |
| 5–ம் ,, | 0 | 7 | 0 | 0 | 8 | 0 | 0 | 12 | 0 |
| 6–ம் ,, | 0 | 12 | 0 | 0 | 14 | 0 | 1 | 2 | 0 |
| 7–ம் ,, | 1 | 0 | 0 | 1 | 2 | 0 | 1 | 6 | 0 |
| 8–ம் ,, | 1 | 2 | 0 | 1 | 4 | 0 | 1 | 8 | 0 |

2. சிறப்புக் கட்டணங்கள் (Special Fees) கீழ்க்கண்ட விகிதங்களுக்கு மேல் வசூலிக்கப்படக்கூடாது:—

| | | | |
|---|---|---|---|
| விளையாட்டுக் கட்டணம் | 0 | 4 | 0 |
| நூல்நிலையக் கட்டணம் | 0 | 4 | 0 |
| நுழைவுக் கட்டணம் | 0 | 4 | 0 |

இவை, உயர்தர ஆரம்ப வகுப்புகளுக்கு.

3. உதவிபெறும் ஆரம்பப் பள்ளிகளுக்கு, சம்பளச் சலுகைக்கான நஷ்ட ஈடு, மேற்குறித்த விகிதங்கள் அல்லது அந்தப் பள்ளிகள் நடைமுறையில் வசூலித்துவரும் கட்டணங்கள் ஆகிய இவற்றில் எது குறைவான விகிதமோ அதன்படிதான் தரப்படும். சம்பளச் சலுகை நஷ்ட ஈடு சம்பந்தமாக, சென்னை அரசாங்கத்தால் இதற்கு முன் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தாலும், இப்போது பிறப்பிக்கப்படுகிற இந்த உத்தரவின்படிதான் நஷ்ட ஈடு அளிக்கப்படும்.

(கவர்னரின் உத்தரவுப்படி)
K. குலாம் மகமது,
(உண்மைப் பிரதி) அரசாங்கத்தின் செயலாளர்.

## ஆரம்பப் பள்ளிகளில் சம்பளச் சலுகை

### அரசாங்கத்தின் உத்தரவு

ஆரம்பப் பள்ளிகளிலும், செகண்டரி பள்ளிகளிலும் முறையே எட்டாவது வகுப்பு வரையிலும், மூன்றாவது பாரம் வரையிலும் பயிலும் மாணவர்களுக்கு இனிக் கட்டணம் இல்லை என்று, சென்னை அரசாங்கத்தார் 19-5-55 அன்று, பிறப்பித்த உத்தரவு பின்வருமாறு :

### ஜி. ஓ. எண் 926 (கல்வி) 19-5-55

(1) 1955-56 என்னும் பள்ளிக்கூட ஆண்டிலிருந்து, செகண்டரி பள்ளிகளிலும் ஆரம்பப் பள்ளிகளிலும், மூன்றாவது பாரம் வரையில் படிக்கும் எல்லா ஏழை மாணவர்களுக்கும் கட்டணம் வசூலிக்கப்படக்கூடாது என்று இதன்மூலம் சென்னை அரசாங்கம் உத்தரவிடுகிறது. எந்த மாணவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் 1200 ரூபாய்க்கு மேற் போகாமல் இருக்கிறதோ, அவர்கள் அனைவரும், இந்தச் சம்பளச் சலுகை பெறுவதற்குரிய ஏழை மாணவர்களாகக் கருதப்படுவர்.

(2) மெடிகல் இன்ஸ்பெக்ஷன், நூல் நிலையம், விளையாட்டு முதலியவற்றிற்காக வசூலிக்கப்படும் கட்டணங்களுக்கு இந்தச் சலுகை கிடையாது.

(3) உள்ளாட்சி மன்றங்களால் (Local Boards) நடத்தப்படும் பள்ளிகளில், அந்த மன்றங்களின் எக்சிகூடிவ் அதிகாரிகளாலும், தனிப்பட்ட நிர்வாகிகளால் நடத்தப்படும் பள்ளிகளில் அந்தப் பள்ளிகளின் கரஸ்பாண்டெண்ட்களாலும் இந்தச் சலுகை வழங்கப்படும். ஆனால் உள்ளாட்சி மன்றங்களின் எக்சிகூடிவ் அதிகாரிகள்,

இந்தச் சலுகை வழங்கும் அதிகாரத்தை, சம்பந்தப்பட்ட பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கே தந்துவிடுவது நல்லது என்று அரசாங்கம் அவர்களுக்குத் தெரிவித்து வேண்டிக் கொள்கிறது.

(4) தான் படித்துவரும் வகுப்பில் ஒரு மாணவன் ஒரு முறை தவறிவிட்டாலும், அடுத்த ஆண்டு, அதே வகுப்புக்கு அவனுக்கு சம்பளச் சலுகை வழங்கப்பட வேண்டும். ஆனல் அந்த ஆண்டின் முடிவிலும் அவன் மேல் வகுப்புக்கு மாறத் தவறிவிட்டால் அதன் பிறகு அவனுக்குச் சலுகை கிடையாது.

ஆனல் இங்ஙனம் சம்பளச் சலுகையை இழந்த ஒரு மாணவன், மேல் வகுப்புக்கு மாறிவிட்டபிறகு, மறுபடியும் சம்பளச் சலுகை அளிக்கப்படும்.

(5) இந்தச் சலுகை பெறுவதற்கு முன்னல், மாணவர்களால், சென்னை கல்வி இலாகா (திருத்தப்பட்ட) விதிகளின் 18–வது இணைப்பில் தரப்பட்டுள்ள முறைப்படி எழுதப்பட்ட, வருமான நற்சான்றிதழ் (Certificate of Income) சமர்ப்பிக்கப்படவேண்டும்.

(6) ஆரம்பப் பள்ளிகள்–செகண்டரி பள்ளிகள் ஆகியவற்றின் நிர்வாகிகளுக்கு, இந்தச் சம்பளச் சலுகை காரணமாக ஏற்படும் நஷ்டம் முழுவதையும் அரசாங்கத்தார் ஈடு கட்டித் தருவார்கள்.

(கவர்னரின் உத்தரவுப்படி)

K. குலாம் மகமது,

அரசாங்கத்தின் இணைச் செயலாளர்.

## ஹரிஜன் மாணவர்கள் சம்பளச் சலுகை

### அரசாங்கத்தின் உத்தரவு

ஹரிஜன் மாணவர்களின் சம்பளச் சலுகை சம்பந்தமாக, சென்னை அரசாங்கத்தார், 30–8–1955–ல் பிறப்பித்த ஜி. ஓ. எண் 2740 பின்வருமாறு :—

(1) 29–6–48ல் பிறப்பிக்கப்பட்ட ஜி. ஓ. எண் 1667ன்படி, செகண்டரி பள்ளிகளில், 1 முதல் 6–வது பாரம் வரையில் படிக்கும் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்த ஆண் பெண் இருவகை மாணவர்களுக்கும், 1948–49 முதல் 10 ஆண்டுகளுக்கு, முற்றிலும் சம்பளம் வசூ

கிக்கப்படமாட்டாது. 10-8-48-ல் பிறப்பிக்கப்பட்ட ஜி. ஓ. எண் 2260ன்படி, செகண்டரி பள்ளிகளில் 1 முதல் 5-வது வகுப்பு வரை பயிலும் ஹரிஜன் மாணவர்களுக்கும் மேற்படி பத்தாண்டுகளுக்கு மேற்படி முழுச் சம்பளச் சலுகை உண்டு என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. இப்போது, அரசாங்கத்தார், இதன்மூலம், ஆரம்ப அல்லது உயர்தர ஆரம்பப் பள்ளிகளில் 1 முதல் 8-வது வகுப்பு வரை பயிலும் எல்லா ஹரிஜன மாணவர்களுக்கும், அந்தப் பள்ளிகள் தனிப்பட்ட நிர்வாகத்தில் இருந்தாலும் சரி, பொது நிர்வாகத்தில் இருந்தாலும் சரி, முழுச் சம்பளச் சலுகையை அளிக்கிறார்கள். ஹரிஜன மாணவர்களின் பெற்றோர்களுடைய வருமான அளவுபற்றிய கணக்கில்லாமல், எல்லா ஹரிஜன மாணவர்களுக்கும் இந்தச் சலுகை உண்டு. ஒருமுறை மேல் வகுப்புக்கு மாறத் தவறிவிட்டாலும், அடுத்த ஆண்டும், இந்தச் சலுகை மாணவர்களுக்கு உண்டு.

(2) இந்தச் சலுகைக்கான நஷ்ட ஈட்டுத் தொகை முழுவதும், மாகாண ஹரிஜன உயர்வு நிதியிலிருந்து கொடுக்கப்படும்.


## மிருதங்க ஸ்வரபோதினி

ஆசிரியர்: சோமங்கலம் எதிராஜன்

மிருதங்க வித்தியாலயம், அகரம் பெரம்பூர், சென்னை-11.

விலை 12 அணு

(தபால் செலவு உட்பட) முன்பணம் அனுப்பவும்.

இயல் இசை நாடகம் எனும் முத்தமிழும் தனித்து இயங்கலாம். ஆனால் அவை யாவும் பக்க வாத்தியங்களைத் தழுவா வின்றால் ரஸிக்கும் தன்மை இல்லாமல் போகிறது. அதற்கு உயிர் ஊட்டும் வகையில் உள்ளது மிருதங்கமாகும். விரல்களின் நிலைக்குத் தக்கவாறு எவ்வாறு நாதம் ஏற்படுகிறது என்பதை சுமார் 30 படங்களுடன் விளக்கி இருக்கிறார் ஆசிரியர். ஆசிரியரின் நெடுங்கால அனுபவமும், ஆழ்ந்த மிருதங்க வித்வத் தன்மையும் இதிலே பிரகாசிக்கின்றன. அடிப்படைத் தத்துவங்களை எளிதாகப் புரிந்து கொள்ளக்கூடிய நிலையில் உள்ள இந்தப் புத்தகத்தை மிருதங்கக் கலையில் ஆர்வமுள்ள யாவரும் பயன்படுத்தினால் அவர்களது ஞானம் இன்னும் சுடர்விட்டுப் பிரகாசிக்கும்.

# Government of Madras.

Education and Public Health Department,
G. O. Ms. No. 2740, Education dated 30th
August, 1948.

Educational concessions - Rule 92 of the Madras Educational Rules - Grant of full fee concessions to Harijan pupils in Elementary Schools - Sanctioned.

## ORDERS:

In G. O. No. 1667, Edn., dated 29-6-1948, the Government directed that for a period of 10 years beginning with 1948-49, full fee concessions be granted to Harijan pupils, both boys and girls reading in Forms 1 to 6 in Secondary Schools. In G. O. No. 2260, Edn., dated 10-9-1948 the Government directed that for the same period full fee concessions be granted to Harijan boys studying in classes 1 to 5 of Secondary Schools also. The Government now directs that full fee concessions be granted to Harijan pupils in Elementary and Higher Elementary Schools both under public and private managements for a period of ten years from 1949-50 irrespective of the income limits of parents of the pupils and that they be allowed to retain the concession for a second year also in any of the classes 1 to 8.

2. The expenditure of the grant of the concessions will be met entirely from the Provincial Harijan Uplift Fund, that is it will be debited in the head "47. Misc.-a. Labour F. Expenditure from the fund for village reconstruction and Harijan Uplift (Madras) Expenses (Fee Concessions to Harijans in Ele. Schools).

## GOVERNMENT OF MADRAS.

Department of Health, Education and Local Administration. (Education.)

## G. O. No. 926, 19th May, 1955.

Education—Full fee concession to children in elementary and secondary schools up to Form 111-Orders issued.

Read the following papers :—

G. O. No. 839, Education, dated 6th April 1951.

G. O. No. 1250, Education, dated 31st May 1952.

Order No. 926, Education, dated 19th May 1955.

The Government direct that, with effect from the school year 1955-56, all poor children be exemped from the payment of school fees in elementary schools and in secondary schools up to and inclusive of Form 6. A pupil will be considered poor for the purpose of this exemption if the annual gross income from all sources, of his parents or guardian does not exceed Rs. 1,200.

2. The concession will not apply to any of the special fees levied for specific purposes such as medical inspection, library, games etc.

3. The concession will be granted by the executive authority of a local body in the case of institutions under it and by the correspondent in the case of institutions under private management. The executive authorities of the district boards are, however, requested to delegate the powers to the Headmasters concerned, so that the scheme may work smoothly.

4. The concession shall be withheld from a pupil if he or she is detained in any class or form, provided that a pupil may retain the concession for a second year also in the same standard in anyone of the standards 1 to 8 in elementary schools and in the same class or form in anyone of the classes or forms up to Form 3 in secondary schools. His or her concession shall be withdrawn only if he or she fails to secure a pass even at the end of the second year.

A concession withdrawn shall be revived when the pupil is promoted to the next higher class or form.

5. A certificate of income, in the form prescribed in Appendix 18 of the Madras Educational Rules (as

amended) should be produced before the concession is granted.

6. The fee income lost by the managements of elementary and secondary schools will be made good to them in full.

(By order of the Governor.)

K. GHULAM MAHMOOD,
Joint secretary to Government.

(True copy.)

## GOVERNMENT OF MADRAS.

## ABSTRACT.

ELEMENTARY EDUCATION—Aided—Rates of fees—Prescribed—Payment of compensation for fee concession—Orders issued.

Health, Education and Local Administration Department.

G. O. Ms. No. 1546 Education, Dated 14—9—55.

**ORDER:**

The Government direct that the fees that may be levied in elementary schools under aided managements in the City of Madras, the municipal areas and non-municipal areas shall not exceed the following monthly rates for purpose of compensation and that fees may be levied for 11 months in a year:—

| | Non-Municipal. | Municipal. | Madras City. |
|---|---|---|---|
| Standard 1 | 0 2 0 | 0 3 0 | 0 4 0 |
| Standard 2 | 0 3 0 | 0 4 0 | 0 6 0 |
| Standard 3 | 0 4 0 | 0 5 0 | 0 8 0 |
| Standard 4 | 0 5 0 | 0 6 0 | 0 10 0 |
| Standard 5 | 0 7 0 | 0 8 0 | 0 12 0 |
| Standard 6 | 0 12 0 | 0 14 0 | 1 2 0 |
| Standard 7 | 1 0 0 | 1 2 0 | 1 6 0 |
| Standard 8 | 1 2 0 | 1 4 0 | 1 8 0 |

2. Special fees shall not exceed the following rates :—

| | | | | |
|---|---|---|---|---|
| Games fees | 0 | 4 | 0 | For Higher Elementary Standards. |
| Library fees | 0 | 4 | 0 | |
| Admission fees | 0 | 4 | 0 | |

3. In supersession of all orders in the matter, the Government direct that compensation to managements of aided elementary schools on account of fee concessions be paid at the actual rates of fees levied by the managements, or at the above rates, whichever is lower.

(By order of the Governor).

K. GHULAM MAHMOOD,
Secretary to Government.


## சித்த வைத்தியம்

எல்லா வைத்திய முறைகளைவிட மேலானது, நமது தமிழ்நாட்டிற் குரியது. தமிழ்நாட்டு 18 சித்தர்களாலே மேன்மை நிலைமைக்குக் கொண்டுவரப்பட்டது. மற்ற வைத்தியர்களால் சுகப்படுத்தப்படாத அநேக வியாதிகள் குறைந்த செலவிலும் சுகமாக்கித்தரும் முறை தமிழர் சித்த வைத்தியம். இதை கற்காமல் தமிழ்மக்கள் பலபல நவீன வைத்தியங்களைக் கற்று ஏமாந்து போகிறதைப் பார்த்து எல்லாரும் சித்த வைத்தியம் எளிதில் கற்க நமது சித்த வைத்தியக் கல்லூரியில் ஒரு சிறந்த பாடதிட்டம் வகுத்து, நேரில் வந்து படிக்க முடியாதவருக்கு, தபால் மூலம் கற்றுக்கொடுத்து அவர்களுக்கு A. S. M. (Associate Siddha Medicine) என்ற பட்டமும், அதன்பின் அனுபவம் வாய்ந்த ஒரு சித்த வைத்தியரிடம் நேர்முகப் பயிற்சி ஆனபின் F. S. M. (Fellow of Siddha Medicine) என்ற பட்டம் பெற்று சித்த வைத்தியம் பயில ஏற்பாடு செய்யப்படும். மற்ற விபரங்களுக்கு—பிரின்சிபால், சி. வை. கல்லூரி, தாசர்புரம், தின்னனூர், சென்னை—என்று எழுதவும்.

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

டன. இந்த வருந்தத்தக்க உண்மையைத் தென்னாட்டிலுள்ள எல்லாக் கட்சியினரும், ஒரு சமயம் இல்லாவிட்டாலும் மற்றோர் சமயம், நிச்சயமாக ஒப்புக்கொள் கின்றனர். முதல் ஐந்தாண்டுதிட்டத்தில்தான் நிலைமை இப்படியாகிவிட்டதே, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது தென்னாடு தனக்கு உரிய பங்கைப் பெறும் என்று பலரும் ஆவலோடு எதிர்பார்த்து வந்தனர். ஆனால் இப்போது வெளியாகி வருகிற செய்திகளைப் பார்த்தால், புதிய திட்டத்தின் கதையும் பழைய திட்டத்தின்படி தான் இருக்கும் என்று தோன்றுகிறது.

புதிய திட்டத்தின்படி இந்தியா முழுவதற்குமாகச் செலவிடப்பட இருக்கிற தொகை ஏறத்தாழ 5000 கோடி ரூபாய் ஆகும். இந்தப் பெருந்தொகையில், 400 கோடி ரூபாயை சென்னை மாகாணத்திற்கு ஒதுக்கவேண்டுமென்றும், அப்படி ஒதுக்கப்பட்டாலொழிய சென்னைமாநிலத்தின் தொழில் வளர்ச்சி சிறப்புற்று ஓங்காது என்றும், இங்கே வளர்ந்து பெருகியுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க இது ஒன்றே வழி என்றும், தெளிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக்காட்டி சென்னை அரசாங்கம், இந்தியப் பேரரசுக்கு விண்ணப்பம் அனுப்பியிருந்தனர். சென்னை அரசாங்கம் கேட்டிருப்பது மிகவும் நியாயமான தொகை என்றும், இது நிச்சயம் அனுமதிக்கப்படும் என்றும் எல்லோரும் எதிர்பார்த்திருந்தனர். முதலமைச்சர் காமராஜரும், நிதி அமைச்சர் சுப்ரமண்யரும் டில்லிக்கே நேரில் சென்று, மத்திய அரசாங்க உயர் தலைவர்களைச் சந்தித்து, தங்களுடைய கோரிக்கையின் நேர்மையை வற்புறுத்திக் கூறிவிட்டும் வந்தனர். என்றாலும் என்ன பயன்? 192 கோடி ரூபாய்களைத்தான் சென்னை மாநிலத்திற்கு இரண்டாவது திட்டத்தின்படி ஒதுக்க முடியும் என்று இந்தியப் பேரரசைச் சேர்ந்தவர்கள் தெரிவித்துவிட்டனர். இந்தச் செய்திகளை நாளிதழ்களில் படிக்கும்போது, சென்னை மாநிலத்திற்கு ஏமாற்றமா — மறுபடியுமா என்றுதான் கேட்கத் தோன்றுகிறது. எத்தனை முறைதான் நாம் ஏமாறுவது? இதற்கு ஒரு முடிவே கிடையாதா? ★

---

வாழ்க்கை என்பது ஒரு படிப்பினை. அந்தப் படிப்பை அபிவிருத்தி செய்துகொள்வதற்கும், அதைச் செயலில் காட்டுவதற்கும் சாதனமாயிருப்பது சமுதாயம். —மாஜினி

நம்மிடம் அன்பு கொண்டவன் நம்மை எவ்வளவுதான் திட்டிப் பேசினாலும் நம்மை அவமானப் படுத்துவதாகாது.

—மாக்சிம் கார்க்கி

# வாத்தியாரம்மாளை அடித்தவருக்கு ஜெயில் தண்டனை

## பெண்ணை அடித்தது சூரத்தனமல்ல! மாஜிஸ்திரேட் கண்டனம்

நூர்க்காபாய் (20 வயது) என்ற வாத்தியாரம்மாளை அடித்த ஜெகதீச முதலியார் என்ற காங்கிரஸ்காரருக்கு ஜெயில் தண்டனை போடப்பட்டது. "ஒரு பெண்ணை அடித்தது சூரத்தனமல்ல, கோழைத்தனம்" என்று மாஜிஸ்திரேட் கூறினார்.

### வாத்தியாரம்மாள் புகார்

வாத்தியாரம்மாள், புகாரில் கூறியதாவது :—

நான் ஜார்ஜ்டவுன் பெருமாள் கோவில் தோட்டத் தெருவிலுள்ள ராஜாஜி ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் தலைமை ஆசிரியையாக (பெரிய வாத்தியாரம்மாள்) வேலை செய்கிறேன்.

சென்ற ஜூலை மாதம் 21-ந் தேதி நான் பள்ளிக்கூடத்தில் வகுப்பு நடத்திக்கொண்டிருந்தேன். அப்பொழுது ஜெகதீச முதலியார் அங்கு வந்தார்.

### யார் வாத்தியார் ?

"5-வது வகுப்பு வாத்தியார் யார் ?" என்று கேட்டார். நான் தான் என்றேன்.

"என் மகளை வகுப்பைவிட்டுப் போகச்சொல்ல உனக்கு என்ன அதிகாரம் ?" என்று கேட்டார்; பிறகு என்னை "வெளியே போ" என்றார்.

"பொறுமையாக நான் சொல்வதைக் கேளுங்கள்" என்றேன்.

### "பல்லை உடைப்பேன்!"

"வாயைத் திறக்காதே, பல்லை உடைப்பேன்" என்றார். என்னை மிரட்டினார். நான் பயந்துவிட்டேன்.

### கம்பி எண்ண......

"உன்னை அடித்தால் அதனால் ரூ. 100, 200 அபராதம் கட்ட நேர்ந்தாலும் சரி, கம்பிகளை எண்ண (ஜெயிலுக்குப் போக) நேர்ந்தாலும் சரி, தயாராக இருக்கிறேன்" என்றார்.

பிறகு நான் உட்கார்ந்திருந்த நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தார்.

### "போ! வெளியே!"

"உன் நாற்காலியில் நான் உட்கார்ந்துவிட்டேன். இனி நீ போகலாம்" என்றார்.

உடனே பள்ளிக்கூட காரியதரிசியை அழைத்து வருமாறு பையன்களிடம் சொன்னேன்.

"ஒருவரும் போகக்கூடாது" என்றுசொல்லி என்னை வெளியே போகச்சொன்னார்.

நான் அவரை வெளியேபோகச் சொன்னேன். அவர் என்னைத் திட்டினார்.

## கன்னத்தில் அடித்தார்

என் இடது கன்னத்தில் அறைந்தார். கன்னத்தில் வைத்த கையை எடுக்காமல், "வாயைத் திறக்காதே, திறந்தால் பல்லை உதிர்ப்பேன்" என்றார். மறுபடியும் அடிக்க கை ஓங்கினார். மாணவர்கள் கதறினார்கள். அவர்களை மிரட்டிவிட்டு மறுபடியும் என் நாற்காலியில் உட்கார்ந்தார்.

## அப்பா வந்தார்!

அதற்குள் அங்கு கூட்டம் கூடிவிட்டது. மற்ற வாத்தியாரம்மாக்கள் வந்தார்கள். என் அப்பா வந்தார்.

"என் மகளை ஏன் அடித்தீர்? அவள் குற்றம் செய்திருந்தால் அது சம்பந்தமாக புகார் செய்யக் கூடாதா?" என்று ஜகதீச முதலியாரை என் அப்பா கேட்டார். "எனக்கு அதிகாரம் இருக்கிறது. இந்தப் பள்ளியின் ஸ்தாபகன் நான்" என்று அவர் பதில் சொன்னார்.

பிறகு நாங்கள் வீட்டுக்குப் போனோம். அவர்மீது வழக்குத் தொடர்ந்தேன், என்று வாத்தியாரம்மாள் புகாரில் கூறி முடித்தாள்.

## தீர்ப்பு

இந்த வழக்கை சென்னை 2—வது மாகாண மாஜிஸ்திரேட் எஸ். நடராஜன் விசாரித்தார். அவர் தமது தீர்ப்பில் சொன்னதாவது:—

ஜகதீச முதலியார் குற்றவாளி. வாத்தியாரம்மாளை அடித்தது கோழைத்தனம். வாத்தியாராக இருந்திருந்தால் அவர் செய்கைக்குப் பதில் உடனே கிடைத்திருக்கும். வாத்தியாரம்மாள் ஆனதால் வகுப்பில் புகுந்து அடித்தார்" என்று கூறினார்.

## தண்டனை

அவருக்கு ஒரு மாத கடுங்காவல் தண்டனையும், ரூ. 200 அபராதமும் விதித்து மாஜிஸ்திரேட் தீர்ப்பளித்தார்; அபராதம் கட்டத் தவறினால் மேலும் ஒரு மாத கடுங்காவல் தண்டனை அனுபவிக்கவேண்டும்.

விசாரணையின் போது வாத்தியாரம்மாள் தரப்பில் அட்வகேட் மாதவனும், ஜகதீச முதலியார் தரப்பில் அட்வகேட் பி. என். மேனனும் கோர்ட்டில் ஆஜரானார்கள். —"தி. தந்தி."

---

உழைப்பினால் சேர்ந்த பொருளுக்கு உள்ள கௌரவம், கடன் வாங்கிய முதலுக்குக் கிடையாது.

—"ஹென்றிஃபோர்டு"

# மக்களைக் கவர்ந்த மகத்தான கவிஞர்!

இந்தத் திங்களின் தொடக்கத்தில், தமிழ் நாடெங்கும், கவிஞர் சுப்பிரமணிய பாரதியாரின் பிறந்த நாள் மிகச் சிறப்பாக நடைபெற்றிருக்கிறது. பாரதியாரின் பிறந்த நாளை, தமிழ் மக்களெல்லாம், செந்தமிழின் சுவையை உணர்ந்தவரெல்லாம், புதியதோர் உலகு செய்வோம்—கெட்ட போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம் என்கிற கிண்கிணி கீதம் இசைப்பவரெல்லாம், சமதர்ம சகாப்தம் தமிழ் நாட்டில் அரும்பியாக வேண்டும் என்கிற நல்லுணர்ச்சி படைத்தவரெல்லாம், ஒன்று திரண்டு கொண்டாடியிருக்கின்றனர்.

தமிழ் மக்களுக்குள்ளே எத்தனையோ வகையான சாதிகள் உண்டு, எத்தனையோ விதமான மதங்களும் உண்டு. கொள்கை வேறுபாடுகளும் கருத்து மாறுபாடுகளும் கட்சி பேதங்களும் இயக்க வேற்றுமைகளும் ஏராளம். என்றாலும் எல்லாத் தமிழர்களும், தங்களுக்கிடையே இருக்கிற எல்லாவித வேற்றுமைகளையும் மறந்துவிட்டு, ஒருசேரத் திரண்டு ஒரே குரலில் பாராட்டினர் கவிஞர் பாரதியாரை. பாரதி எங்கள் கவிஞன்—எங்களுக்கு வாழ்வளிக்க வந்த கவிஞன்—எங்களுடைய பாதையிலே ஒளியைப் பாய்ச்சும் ஒப்பற்ற கவிஞன் என்கிற முழக்கம், தமிழர் வாழும் பகுதிகளிலெல்லாம் எழுந்தது இந்தத் திங்கள்.

சங்க காலத்திலே, தமிழ்ப் பாவலர்கள், மக்களிடையே உலவி, மக்களுக்காக எண்ணி, மக்களுடைய பிரச்சினைகளைப் பற்றிப் பாடி, மக்களோடு மக்களாக இரண்டறக் கலந்து வாழ்ந்தார்கள். மக்களுடைய வாழ்க்கை—மக்களுடைய வீரம்—மக்களுடைய இன்பம்—மக்களுடைய துன்பம்—என்று இவ்வகையாக உள்ள மக்கள் மன்றத்துப் பிரச்சினைகளே அவர்களுடைய பாடல்களின் அடிப்படைகளாக விளங்கின. மக்களைப் பற்றி அவர்கள் பாடினார்கள். ஆகவே மக்களும் அவர்களை விரும்பினார்கள்.

ஆனால் சங்க காலத்துக்குப் பின்னால் வந்த தமிழ்ப் புலவர்களோ, பெரும்பாலும், ஆண்டவனையும் அவனுடைய அற்புத லீலைகளையும் மட்டுமே தங்களுடைய பாடல்களுக்கான மூலப் பொருள்களாக அமைத்துக் கொண்டனர். பன்னிரு கையனைப் பற்றியும், பாலதண்டாயுதனைப் பற்றியும், வேழமுகத்து

விநாயகனைப் பற்றியும், திரிபுரம் எரித்த விரிசடைப் பெம்மானைப்பற்றியும் தான் அவர்கள் பாடினரே தவிர, மக்களை, மக்களுடைய இன்ப துன்பங்களை, அவர்களுடைய வாழ்க்கையை, அந்த வாழ்க்கையிலே எழுகின்ற ஆயிரமாயிரம் சிக்கல்களை முற்றிலுமே மறந்து விட்டனர். மக்களுக்கு வாழ்வளிக்கும் மக்கள் கவிஞர்களாக விளங்கவில்லை அவர்கள். தேவாதி தேவர்களைப் பற்றியே கவலைப்படும் ஓயாத பஜனை மடத்துப் புலவர்களாகி விட்டனர். வாழ்க்கைக் காவியங்கள் பிறக்கவில்லை அவர்களிடமிருந்து. புராண ஏடுகள் மட்டுமே பிறக்கலாயின.

கடவுளைப் பற்றியும் கடவுளின் கருணையைப் பற்றியும் புலவர்கள் பாடுவதில் தவறு இல்லை. ஆனால் எல்லாப் பாடல்களுமே எம்பெருமானுக்கே சொந்தம் என்று நிலைமை இருக்குமானால், அந்த நிலைமை, மக்களுடைய இதயத்தை எப்படிக் கவர முடியும்? அதனால்தான், சங்க காலத்துக்குப் பின்னால் தோன்றிய பெரும்பாலான புலவர்கள் தீட்டிய கவிதைச் சுவடிகள், பூஜா மாடத்துக்கு ஏற்ற பொருள்களாக மாறிவிட்டனவே தவிர, மக்கள் மன்றத்திலே உலவவில்லை. அவர்களுடைய இதயத்தோடு இதயமாக ஒன்றி, நரம்போடு நரம்பாக இணைந்து, இரத்தத்தோடு இரத்தமாகக் கலக்கவில்லை.

இப்படிப்பட்ட வறண்ட பூமியிலே புலவர்கள் உழன்று கொண்டிருந்த போதுதான், கவிஞர் பாரதியார், தைரியமாக முன்னால் வந்து, சங்க காலத்துப் புலவர்களைப் போல, மக்களைப் பற்றியும் மக்களுடைய பிரச்சினைகளைப் பற்றியும் அருமையாகவும் இனிமையாகவும் பாடத் தொடங்கினார்.

கடவுளைப் பற்றியும் அவர் பாடினார். பாடாமல் இல்லை. ஆனால் கடவுளோடு கவிதை ஏடு முற்றுப் பெற்றுவிட்டது என்று அவர் கருதினாரில்லை. நாட்டிலே கொந்தளித்துக் கொண்டிருந்த பல்வேறு பிரச்சினைகளைப் பற்றியும் தன்னுடைய கருத்தைத் தெளிவாகவும் விளக்கமாகவும் திட்டமாகவும் அழகாகவும் அவர் பாடியிருக்கிறார்.

அவருடைய காலத்திலே நாட்டைக் குலுக்கி வந்த மகத்தான பிரச்சினை அந்நிய நாட்டு ஆதிக்கம் ஆகும். புலியென வெள்ளையன் சீறுவதா—ஆமையென அதற்கு நாம் அடங்கிக் கிடப்பதா என்று மக்கள் கொதித்தெழுந்து கேட்டுவந்த காலம் அது. காந்தியாரின் அறப்போர்திக்கெட்டும் பரவி,இளைஞர்களையும் முதியவர்களையும் ஆண்களையும்பெண்களையும் ஏழைகளையும் செல்வர்களையும் போர்க்களத்திலே ஒரு சேர இழுத்துவந்து நிறுத்திவைத்த நேரம். சிறைச்சாலையா—தயார்! தடியடியா—அஞ்சமாட்டோம்! குண்டு வீச்சா—அதுவும் நடக்கட்டும்

என்று இந்திய வீரர்கள் நெஞ்சை நிமிர்த்தித் தலையை உயர்த்தி வீர நடை போட்ட சகாப்தம். எங்கு பார்த்தாலும், எவரைப் பார்த்தாலும், எந்த நேரத்தில் பார்த்தாலும், பிற நாட்டு ஆதிக்கத்தின்மீது ஆத்திரமும் ஆவேசமும் பொங்கி எழுந்த வேளை. இப்படிப்பட்ட காலத்திலே உலவிய கவிஞர் பாரதியார், தேசிய எழுச்சிக்கு ஆளாகாமல் இருக்க முடியுமா? வெள்ளையனின் அடக்குமுறையைக் கண்டு கொதித்தெழுந்தது அவரது உள்ளம். வீராவேசமான கவிதைகளை, சுண்டிச் சோர்ந்த நரம்புகளையும் தட்டி எழுப்பும் தன்மை வாய்ந்த பாடல்களை, நரம்புக்கு முறுக்கேற்றி இதயத்திற்கு விறுவிறுப்பூட்டும் சொல்லோவியங்களை நூற்றுக் கணக்கிலே எழுதிக் குவித்தார். அவர் அந்தக் காலத்தில் தீட்டிய தேசியப் பாடல் ஒவ்வொன்றும், நாட்டு விடுதலைப் போருக்கான ஒவ்வொரு போர்வாளாகப் பயன் பட்டது.

கோழைகளையும் வீரர்கள் ஆக்கத்தக்க வீறுபடைத்த தேசியப் பாடல்களைப் பாடியதோடு நிற்கவில்லை பாரதியார். நம்முடைய மக்களிடம் இருக்கிற குறைகளை, மூடநம்பிக்கைகளை, முட்டாள்தனங்களை, தவறான போக்குகளை, அர்த்தமற்ற சாதி பேதங்களை, அத்தனையையும் இடித்திடித்துக் காட்டியிருக்கிறார். ஆம்! அவர் ஒரு தேசியக் கவியாக மட்டும் இருக்கவில்லை. சமுதாய சீர்திருத்தக் கவியாகவும் விளங்கினார்.

பாரதியார் ஒரு தேசியக் கவி என்று தெரிந்திருக்கிற அளவுக்கு, அவர் ஒரு சமுதாயப் புரட்சிக் கவிஞர் என்பது இன்னமும் நாட்டிலே விளக்கமாகத் தெரியவில்லை. தெரியவில்லை என்றால், அது தெரிவிக்கப்படவில்லை. ஆனால் தெரியவில்லை, தெரிவிக்கப்படவில்லை என்கிற காரணங்களால், பாரதியை, புரட்சிக் கவிஞரல்ல என்று எவரும் இயம்பிவிட முடியாது.

ஆஹா! அந்தக் காலம் எவ்வளவு பொன்னான காலம்! அந்தக் காலம்போல ஆகுமா இந்தக் காலம் என்று பலர் கைகளைப் பிசைந்துகொள்வது நம்நாட்டிலே ஓர் சர்வசாதாரணக் காட்சி. இந்தக் காலம் கெட்டுப் போய்விட்ட காலமென்பதும், இறந்த காலமே நல்ல காலம் என்பதும் இவர்களுடைய கோட்பாடு. இந்தக் காலத்தில் இருக்கிற எந்தப் புதுமையையும் எந்தச் சிறப்பையும் எந்த முன்னேற்றத்தையும் இவர்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். ''நல்லவையெல்லாம் பழங்காலத்தில்தான் இருந்தன. கெட்டவையெல்லாம் இந்தக் காலத்தில்தான் இருக்கின்றன'' என்பது இவர்களுடைய சித்தாந்தம். இப்படிப்பட்டவர்களைப் பார்த்துப் பாரதியார் கடுங்கோபம் கொள்கிறார். கோபத்தோடு கேட்கிறார் :—

மூன் பிறந்ததோர் காரணத்தாலே
மூடரே! பொய்யை மெய்யெனலாமோ?
முன்பு எனச் சொல்லும் காலமதற்கு
மூடரே, ஓர் வரைதுறை உண்டோ?
முன்பு எனச் சொல்லின், நேற்றும் முன்பே யாம்!
மூன்று கோடி வருடமும் முன்பே!
முன்பிறந்து, எண்ணிலாது, புவிமேல்
மொய்த்த மக்களெல்லாம் முனிவோரோ?

நீர் பிறக்குமுன் பார்மிசை மூடர்
நேர்ந்ததில்லை என நினைந்தீரோ?
பார் பிறந்ததுதொட்டு இன்றுமட்டும்
பலப்பலப்பல பற்பல கோடி!
கார் பிறக்கும் மழைத்துளிபோலே
கண்ட மக்கள் அனைவருள்ளேயும்
நீர் பிறப்பதன் முன்பும் மடமை
நீசத்தன்மை இருந்தன. அன்றோ?

சென்றதையே எண்ணி எண்ணி வருந்தும் இத்தகு மந்த மதியினைப் பார்த்துப் பாரதியார் மறுபடியும் இயம்புகிறார் :

“சென்றது இனி மீளாது மூடரே! நீர்
எப்போதும் சென்றதையே சிந்தை செய்து
கொன்றழிக்கும் கவலையெனும் குழியில் வீழ்ந்து
குமையாதீர்—சென்றதனைக் குறித்தல் வேண்டா.
இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்று நெஞ்சில்
எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக்கொண்டு
தின்று விளையாடி இன்புற்றிருந்து வாழ்வீர்.
தீமையெலாம் அகன்றுபோம்—திரும்பி வாரா.”

எத்தனையோ பேர் இருக்கிறார்கள் நாட்டிலே—இன்னமும்தான்—என் சாதி உயர்ந்தது, உன் சாதி தாழ்ந்தது என்று பேசிக்கொண்டிருப்பவர்கள். இவர்கள், சாதியென்னும் சாக்கடையிலே உருண்டுகொண்டு, அப்படி உருண்டு கொண்டிருப்பதுதான் பெறற்கரிய பேறு என்று கருதுபவர்கள். சாதிக்கோட்டையின் மீது பகுத்தறிவுக்குண்டுகளை வீசி அவற்றைத் தூள் தூளாக்க யாராவது முன்வந்தால் அவர்களைப் பார்த்துச் சீறியெழுந்து கோபத்தைக் கொட்டுவார்கள். சாதி பேதம் பேசி சமுதாயத்தைச் செல்லரிக்கும் இந்தச் சிறுமதியாளர்களைப்பற்றிப் பேசாமலிருப்பாரா பாரதியார்? பேசுகிறார் :—

"ஏழை என்றும் அடிமை என்றும்,
எவனுமில்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனிதர் என்போர்
இந்தியாவில் இல்லையே!"

*　　*　　*

"சாதிக் கொடுமைகள் வேண்டாம்—அன்பு
தன்னில் தழைத்திடும் வையம்"

*　　*　　*

"மேலவர் கீழவர் என்றே—வெறும்
வேடத்தில் பிறப்பினில் விதிப்பனவாம்
போலிச் சுவடியை எல்லாம்—இன்று
பொசுக்கிவிட்டால் எவர்க்கும்
நன்மை உண்டென்பேன்!"

*　　*　　*

"எல்லோரும் ஓர்குலம்,
எல்லோரும் ஓர் இனம்
எல்லோரும் இந்நாட்டு மக்கள்,
எல்லோரும் ஓர் நிறை
எல்லோரும் ஓர் விலை
எல்லோரும் இந்நாட்டு மன்னர்."

*ஒன்றே குலம் என்பதை மறந்தது மட்டுமல்ல, ஒருவனே தேவன் என்பதையும் மறந்து விட்டார்கள் நம் மக்களில் பலர். எல்லாம் வல்ல இறைவன் ஒருவனே இருக்கமுடியும் என்பதை மறந்துவிட்டு, ஆயிரமாயிரம் கடவுள்களை உற்பத்தி செய்துகொண்டு, ஒவ்வொரு கடவுளுக்கும் ஒவ்வோர் உற்சவம்—தேர்—திருவிழா என்று அலைகிறார்களே நம் மக்கள், அதனைப் பாரதியார் துளியும் விரும்பவில்லை. விரும்பாததால்தான்,*

"ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று
அலைகின்ற மாந்தர்களே!
பல தெய்வம் கூட்டி வளர்த்து,
வெறுங் கதைகள் சேர்த்து,
மாடனை, காடனை வேடனை போற்றி
மயங்கும் மதியிலிகாள்!
ஏதேனும் நின்றோங்கும்
அறிவொன்றே தெய்வமென்று
ஓதியறியீரோ?"

*என்று கவிதை தீட்டியிருக்கிறார்.*

"பாருக்குள்ளே தெய்வம் ஒன்று—இதில்
பற்பல சண்டை வேண்டாம்."

*  *  *

"தெய்வம் பற்பல சொல்லிப்
பகைத் தீயை வளர்க்க வேண்டாம்."

*  *  *

"தவறுது உணர்வீர் புவியீர்
மாலும் சிவனும் வானோர் எவரும் ஒன்றே."

*  *  *

"அரியும் சிவனும் ஏசுவும்
அல்லாவும் ஒன்றே!"

என்றெல்லாம் பாரதியார் பற்பல முறை இயம்பியிருக்கிறார். பல தெய்வ வழிபாடும், பல சாதிக் கோட்பாடும் அவருக்குச் சிறிதும் பிடிக்காதவை. ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்னும் பழந்தமிழர் நெறியே பாரதியாரின் பாதை.

பெண்களின் முன்னேற்றம் ஏற்பட்டாலன்றி நாட்டின் முன்னேற்றம் ஏற்படாது என்பது பாரதியாரின் அசைக்கமுடியாத நம்பிக்கை. பெண்கள், சமுதாயத்தின் கண்கள். கண்களுக்கு மதிப்பு இல்லாவிட்டால் சமுதாயத்திற்கு எப்படி மதிப்பு உருவாகும்? பாரதியார் இந்தக் கேள்வியை, கேள்வி உருவிலே அல்ல, பாடல் உருவிலே, பற்பல முறை கேட்டிருக்கிறார்.

"மாதர் தம்மை இழிவுசெய்யும்
மடமையைக் கொளுத்துவோம்"

*  *  *

"மண்ணுக்குள்ளே சில மூடர்—நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்!"

*  *  *

"பெண்க ளறிவை வளர்த்தால்—வையம்
பேதமை யற்றிடும் காணீர்"

*  *  *

"பெண்ணுக்கு விடுதலை நீர் இல்லையென்றால்
பின் இந்த உலகிலே வாழ்க்கையில்லை"

இப்படிப்பட்ட கவிதைச் சுடர்களைப் பாரதியாரிடமிருந்து ஏராளமாகப் பெற்றிருக்கிறது தமிழகம்.

தேவையான கருத்துகள்—இனிமையான சொற்கள்—உள்ளத்தை அள்ளும் தமிழ் நடை இவை மூன்றின் தொகுப்புதான் பாரதியாரின் பாடல்கள். படிக்கப் படிக்க இன்பமும், நினைக்க நினைக்கப் புது அறிவும் அள்ளி அள்ளித் தருகின்ற கருத்துச் சுரங்கங்கள் அவருடைய கவிதைகள்.

பாரதியார் அளித்திருக்கிற பாடல்களிலே தேசிய ஆர்வம் இருக்கிறது. செந்தமிழின் இன்பம் இருக்கிறது. கருத்துக்கு விருந்து இருக்கிறது. புது வாழ்வுக்கு வழிவகை இருக்கிறது. சீர்திருத்த ஆவேசம் இருக்கிறது. இன்னும் என்ன வேண்டும்? வேண்டியது எல்லாம் இருக்கிறது. எனவேதான் அவருடைய கவிதை மக்களுடைய உள்ளத்திலே இருக்கிறது.

வாழ்க பாரதியாரின் கவிதை! வளர்க அவருடைய புது உலக ஆர்வம்!

---

## சென்னை
## மாநில எய்டட் பள்ளி மானேஜர்கள் சங்கம்

1955-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் தேதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு மேற்படி மாகாண சங்கத்தின் நிர்வாகக் கூட்டம், 94/95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை, இராஜமன்னார் செட்டியார் ஆரம்பப் பாடசாலையில் நடத்தப்படும். மாகாண நிர்வாக அங்கத்தினர்கள் எல்லோரும் தவறாமல் கூட்டத்தில் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அதுசமயம் முக்கியமாக, சமீபத்தில் அரசாங்கத்தார் வெளியிட்டுள்ள சம்பள நஷ்டஈடு அரசாங்க உத்தரவைப்பற்றி விவாதிக்கப்படும். சங்கத்தின் முடிவான தீர்மானத்தை ஒட்டி, கல்வி மந்திரியையும், கல்வி இலாகா டைரக்டரையும் நேரில் பேட்டிகண்டு ஆவன செய்யப்படும்.

இப்படிக்கு,

P. வீரராகவன், தலைவர்.

A. R. சேஷாசலம், பொதுக்காரியதரிசி.

---

Edited, Printed and Published by P. Veeraraghavan
at the 'Venkatesan' Press
94/95 New St., Mannady, Madras.—1

6 - AUG 1956

## "வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்

| | புத்தகத்தின் விலை | | | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|---|---|
| முதல் வகுப்பு | 0 | 4 | 0 | 25 | 19–5–'54 |
| இரண்டாம் வகுப்பு | 0 | 5 | 0 | 25 | 19–5–'54 |
| மூன்றாம் வகுப்பு | 0 | 8 | 0 | 25 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 | 9 | 0 | 25 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 10 | 0 | 25 | 19–5–'54 |

மாதிரிப் பிரதிக்கு ரூ. 1—2—0 அனுப்பவும்.

## கதைப் புத்தகங்கள்

(S. S. அருணகிரிநாதர்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பாலர் நல்ல கதைகள் | | | | | |
| நான்காம் வகுப்பு | 0 | 5 | 0 | 28 | 19–5–'54 |
| பாலர் கதா போதினி | | | | | |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 5 | 0 | 59 | 19–5–'54 |

இந்த இரண்டு புத்தகங்கள் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் ரூ. 0–5–0 அனுப்பவும்.

## இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

(M. விவேகானந்தா, B. Sc. L. T.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மூன்றாம் வகுப்பு | 0 | 5 | 0 | ... | ... |
| நான்காம் வகுப்பு | 0 | 7 | 0 | 18 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 8 | 0 | 18 | 19–5–'54 |

இந்த மூன்று புத்தகங்கள் வேண்டுவோர் ரூ. 0–10–0 அனுப்பவும்.

## புதிய தேச ஆட்சி முறை

(D. சிவசங்கரராவ், B.A.,L.T.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மூன்றாம் வகுப்பு | 0 | 5 | 0 | 11 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 | 7 | 0 | 8 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 8 | 0 | 8 | 19–5–'54 |

இந்த மூன்று புத்தகங்களை மாதிரி பிரதிகளாக வேண்டுவோர் ரூ. 0–10–0 அனுப்பவும்.

Regd No. M 5018.

## புதுமுறை சங்கக் கணிதம்

K. வீராசாமி, B.A., B.T.

| | புத்தகத்தின் விலே | | | ஜெட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|---|---|
| மூன்றும் வகுப்பு | 0 | 8 | 0 | 14 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 | 10 | 0 | 14 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 12 | 0 | 14 | 19–5–'54 |

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ரூ. 0–15–0 அனுப்பவும்.

## நம் நாட்டு வரலாறு

M. தக்ஷிணமூர்த்தி, B. A., B. T.,
T. S. உமாபதி, M. A., L. T.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மூன்றும் வகுப்பு | 0 | 5 | 0 | 11 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 | 7 | 0 | 8 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 9 | 0 | 10 | 19–5–'54 |

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ரூ. 0–11–0 அனுப்பவும்.

## தமிழ் இலக்கணம்

T. S. உமாபதி, M.A.,L.T.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4, 5–வது வகுப்புகளுக்கு | 0 | 5 | 0 | 8 | 4–5–'55 |

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ரூ. 0–2–0 அனுப்பவும்.

## சிறுவர் பூகோளம் (Tamil)

T. S. உமாபதி, M. A., L. T.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இரண்டாம் வகுப்பு | 0 | 5 | 0 | 13 | 19–5–'54 |

V. K. சேஷாத்திரி, B. A., B. T.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மூன்றும் வகுப்பு | 0 | 7 | 0 | 12 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 | 10 | 0 | 12 | 19–5–'55 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 12 | 0 | 12 | 19–5–'54 |

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ரூ. 1–1–0 அனுப்பவும்.

MotherIndia English Reader Primer - I 0–5–0

மாதிரிப் பிரதிகளுக்கு ரூ. 0–2–0 அனுப்பவும்.

Printed at the Venkatesan Press, Madras—1.